பக்கங்கள் 12

விலை: 20/=

நமது

# முரசொலி

செய்வது துணிந்து செய் சொல்வது தெளிந்து சொல்

නමදු මුරසොලි Namathu Murasoly

வார இதழ்

முரசு - 01 (13.12.2013 - 19.12.2013) திருவள்ளுவர் ஆண்டு: 2044 முழக்கம் - 16

# வெள்ளை இருட்டை விலக்க வந்த கருப்பு நிலா



உள்ளே **வெற்றி முரசு**

தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள் இலவச இணைப்பு

# இந்த தேசம் பிள்ளை நேயமானதா..?



சீ.யோகேஸ்வரன் பா.உ

இன்று எங்கள் நாடு சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் மகளிர் துஸ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்லும் நாடாக மாறியுள்ளதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக 2009ம் ஆண்டு முதல் 2012ம் ஆண்டு வரை 18777 துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளதாக அரசாங்க தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. இதில் தண்டனைச் சட்டக் கோவையின் படி 9676 துஷ்பிரயோகங்கள் இடம் பெற்றுள்ளதாக அறியமுடிகின்றது. சிறுவர் சிறுமியர்களை வேலைக்கு அமர்த்துவதன் மூலமும், பாதுகாப்பற்ற நிலையில் சிறுவர்கள் வாழ்வதாலும், கட்டாயக் கல்விச் சட்டத்தை மீறியதனாலும் சிறுவர் சிறுமியர் உடல் ரீதியான துஷ்பிரயோக தன்மையாலும், தாய், தந்தையர் வெளிநாடு செல்வதாலும் வேறு விதமான முறைகளாலும் சிறுவர் துஸ்பிரயோ கங்கள் நடைபெறுகின்றன.

2010-2012ம் ஆண்டு வரை 24 சிறுவர் சிறுமியர் துர்நடத்தைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், 2010-2013ம் ஆண்டு வரை 1661 சிறுவர் சிறுமியர் துர்நடத்தைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. 2013ம் ஆண்டில் சிறுவர், சிறுமியர் துஸ்பிரயோகம் பெருகிக் காணப்படுகின்றது.

இதில் முக்கியமான சிறுவர், சிறுமியர் துஸ்பிரயோகத்திற்குக் காரணமாக அமைவது எமது நாட்டில் இருந்து தாய்மார் வறுமை காரணமாக வெளிநாடு சென்று பணிப் பெண்களாக வேலை புரிவது. இச்செயற்பாடு இருவிதமான முக்கிய பாதிப்புக்களை எங்களுக்குத் தருகின்றது. பிள்ளைகள் தமது தாயைக் காணாது உளரீதியாக பாதிப்படையும் வேளையில் தாயின் பாதுகாப்புக் கிடையாத காரணத்தால் சிறுவர் சிறுமியர்கள் துஸ்பிரயோகங்களுக்கு ஆளாவதாகும். தாய்மார் தாங்கள் வெளிநாடுகளில் கடமை புரியும் வீட்டு எஜமான்களால் துன்புறுத்தப்படுவதும், பாலியல் வன் முறைக்கு ஆளாக்கப்படுவதும் அதிகரித்த வண்ணமே உள்ளது. இதுசார்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலனோம்புகை அமைச்சின் நடவடிக்கை போதுமானதாக இல்லை.

கடந்த 2010ம் ஆண்டு தொடக்கம் 2013ம் ஆண்டு கால இடைவெளியில் தாய் அல்லது தந்தை வெளிநாடு சென்றதால் 1661 சிறுவர் சிறுமியர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகி உள்ளனர். இதில் தாய் வெளிநாடு சென்றதால் 748 சிறுவரும், 748 சிறுமியரும், தந்தை வெளிநாடு சென்றதால் 100 சிறுவர்களும் 97 சிறுமியர்களும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எங்களது வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த மட்டில் கிட்டத்தட்ட 10 சிறுவ சிறுமியர் துஷ்பிரயோகமே அரசாங்க தகவல்களின் படி வெளிப்படுத்தப்படுகின்றது. ஆனாலும் இதைவிட அதிகமாகவே இடம் பெற்றுள்ளன. பொதுவாக வடக்கு கிழக்கு மாகாணங் களிலே யுத்தம் நடைபெற்ற காலத்தில் துஷ்பிரயோக நிகழ்வுகள் மிகக் குறைவாகவே காணப்பட்டுள்ளன. 2009ம் ஆண்டுக்குப் பின்பே இந்நிலை அதிகரித்துள்ளது. இவ் விட யங்கள் சார்பாக எந்த ஒரு சிறுவர் நன்னடத்தை அதிகாரி களும் எந்தவித வழக்குகளும் அப்போது தாக்கல் செய்ததாக தகவல் இல்லை.

இன்று பொதுவாக சிறுவர் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் தமது கடமைகளைப் பெற்றோரை இழந்த வறிய சிறுவ சிறுமிகளைப் பாதுகாத்து, கல்வியூட்டி வளம்படுத்தும் சிறுவர் காப்பகங்களிலேயே கவனம் செலுத்துகின்றனர். சிறுவர் காப்பகங்களில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டது மிகமிக குறைவாகவே காணப்படுகின்றது. ஆனால் அதிகாரிகளின் கவனம் கூடுதலாக இக்காப்பகங்களிலேயே தங்கியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இயற்கையாலும், யுத்தத்தாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த சிறுவ சிறுமியர்களின் காப்பங்கள் பல காணப்பட்டன. ஆனால் இன்று அவை அரசாங்கத்தின் திட்டமிட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் குறைக்கப்பட்டு, பிள்ளைகள் தொகையும் குறைக்கப்பட்டுள்ளன. தற்போது வடக்கு மாகாணத்தில் 57 சிறுவ சிறுமியர் காப்பகங்கள் 903 சிறார்களையும், 1654 சிறுமியர்களையும் உள்ளடக்கியதாக விளங்குகின்றது. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் 425 சிறுவ சிறுமியர்களுடன் 16 சிறுவ சிறுமியர் காப்பகங்களும், அம்பாறையில் 217 பேரைக் கொண்ட 10 சிறுவ சிறுமியர் காப்பகங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 1031 சிறுவ சிறுமியர்களுடன் 37 சிறுவ சிறுமியர் காப்பகங்களும் அண்ணளவாகக் காணப்படுகின்றது.

பொதுவாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் 120 சிறுவ சிறுமியர் காப்பகங்களில் 4230 சிறுவ சிறுமியர்கள் பராமரிக்கப்படுகின்றனர். இவர்களுக்கான உதவிகள் பெரும்பாலும் எமது புலம்பெயர் உறவுகளாலும், அவர்களது அமைப்புகளாலும், புலம்பெயர் நாட்டு ஆலயங்களாலுமே வழங்கப்படுகின்றன. அரசாங்கத்தைப் பொறுத்தவரை இல்லங்களை தமது சிறுவர் நன்னடத்தை பாதுகாப்புப் பிரிவில் பதிவு செய்து ஒரு பிள்ளைக்கு ஒரு மாத்தத்திற்கு 500 ரூபா வீதம் வழங்குகின்றனர். அதுவும் ஒரு வருடத்தின் பின்பே இவ் இல்லங்களுக்கு இவ் உதவி வழங்கப்படுகின்றது. ஆனாலும் இவ் இல்லங்களை நடாத்தும் அமைப்பினர் இப்பிள்ளைகளின் நலன்கருதி கடும் முயற்சிகளை மேற்கொண்டு உதவிகளைப் பெற்று சேவையாக இப்பணியை புரியும் போது சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் இவர்களை அடக்க முற்படுவதும், சிறுவர்களுக்கான சுதந்திரம் எனக்கூறி இல்ல நிருவாகத்துக்கு எதிராகப் பிள்ளைகளைத் தூண்டி இந்த தர்ம இல்லங்களை இல்லாதொழிப்பதற்கு முயற்சிப்பதையும் இதன் மூலம் இவ் வறிய, பெற்றோரை இழந்த பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்புவதற்குமான தங்களது திட்டங்களை வெற்றியடைய செய்வதிலும் கூடிய அக்கறை காட்டுகின்றனர்.

இன்று ஒருமாத உணவுக்கு தாய் தந்தையை இழந்து கஷ்டத்தில் உணவுக்காக வாழும் சிறுவ சிறுமிக்கு அரசாங்கம் வழங்கும் 500 ரூபா தொகை எவ்வாறு போதுமானது. இவ் விடயங்களில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முன்வரும் யுனிசெப், சேப்த சில்றன் போன்ற சர்வதேச அமைப்புகள் இவ் விடயமாக ஏன் கவனம் செலுத்தவில்லை? தமது மேலைநாட்டு கலாசார பண்பாடுகளையும், சட்ட திட்டங்களையும், சிறுவ சிறுமியர் விடயத்தில் புகுத்த சிந்திப்பவர்கள் தமது மேலை நாடுகளில் சிறுவர் சிறுமியர்களுக்காக அரசாங்கம் வாழ்வாதாரச் செலவுகளை மாதாந்தம் வழங்குவது போன்று இங்கும் மேற்கொள்ள ஏன் அரசாங்கத்துக்கு ஆலோசனை தெரிவிக்கவில்லை. அரசாங்கமும் சர்வதேச நடைமுறைகளைப் பின்பற்ற ஏன் முன்வருவதில்லை?

சிறுவர் பாதுகாப்பு சார்பாக பிரதேச செயலகங்களின் ஆளனி ஏற்படுத்த 300 மில்லியன் ஒதுக்கினாலும் சிறுவர் பாதுகாப்பு சார்பாக உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்கான பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அவர்கள் சிறுவர் இல்ல நிருவாகத்தினரை அடிமைகளாக பயன்படுத்துவதையோ, இல்ல நிருவாகத்திற்கும் பாராமரிப்பு சிறுவ சிறுமிகளுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தவதையோ நிறுத்த வேண்டும். இவ் வேளை வடபகுதியில் உள்ள சிறுவர் இல்லங்களில் ஜனாதிபதியின் பாரியாரின் மேற்பார்வையில் உள்ள சிறுவர் இல்லம் பெரும் குறைபாட்டுடன் உள்ளதாக அறிகின்றேன்.

வடக்கு கிழக்கு மண்ணில் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளிலும், மீள்குடியேற்றப்படாமல் உள்ள இடைத் தங்கல் முகாம்களிலும் வாழும் சிறுவ சிறுமிகளின் நிலை சார்பாக சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் கவனம் செலுத்தவதில் மிக மிக மோசமான நிலையில் இவர்கள் உள்ளனர். சிறு கொட்டகைக்குள் எதுவித அடிப்படை வசதியும் இன்றிய நிலையில் அன்றாட உணவுக்கு கஷ்ரமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் சார்பாக அரசாங்கமோ அல்லது சிறுவர் பாதுகாப்பு மகளீர் விவகார அமைச்சரோ ஏன் கவனம் செலுத்தவில்லை என கேட்க விரும்புகின்றேன். இவர்கள் சிறுவர்கள் இல்லையா? என்றும் கேட்க விரும்புகின்றேன்.

(பாராளுமன்ற உறுப்பினரின் உரையிலிருந்து முக்கிய விடயங்கள் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன.)

நமது முரசொலி

நமது முரசொலி வார இதழ் 16

Namathu Murasoly

இல.: 18/1, இளையதம்பி ஒழுங்கை, செம்மணி வீதி, நல்லூர்.
E-Mail: namathumurasoli@gmail.com, Tel: 0773673829

## ஆயிரம் மண்டேலாக்கள் எழுந்துவரட்டும்!

விடுதலை வேண்டிப் போரிடுகின்ற தேசத்திற்கு மண்டேலா ஒரு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியிருக்கின்றார். அவரது மரணத்தை மொழிகடந்து, நிறம் கடந்து, எல்லை கடந்து இந்த உலகமே துக்கித்து நினைவுகூருகின்றது. மண்டேலாவின் வாழ்க்கை வீழ்ந்து கிடக்கின்ற இனத்திற்கு என்றுமே சக்தி அளித்து நிற்கின்றது. மண்டேலா இந்தளவுக்கு உலகத்தால் பேசப்படுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றது. அவற்றில் சிலவற்றை எடுத்துச் சொல்லப் போனால்.

அரசியலில் ஐந்து ஆண்டுகள் இடைவெளி எடுத்துக் கொண்டால் காணாமல் போகும் அரசியல் தலைவர்களுக்கு மத்தியில், 27 ஆண்டுகள் போராட்டக் களத்திலிருந்தும், மக்கள் மத்தியிலிருந்தும் அகற்றப்பட்டு, தனிமையாகச் சிறையில் அடைக்கப்பட்டபோதும், அந்தத் தலைவனால் உயிர்ப்புடன், மனஉறுதி தளராமல், தான் கொண்டிருந்த இலட்சியக் கொள்கையில் உறுதியாக இருக்க முடிந்தது. இது தான் மண்டேலாவை ஏனைய அரசியல் தலைவர்களிலிருந்து பேச வைத்தது. இந்த உலகமே அவரை வியந்து அண்ணாந்து பார்க்க வைத்தது.

1994இல் தென்னாப்பிரிக்காவில் இனவெறி ஆட்சி அகற்றப்பட்டது. தென்னாபிரிக்க குடியரசாக மிளிர்ந்தது. குடியரசின் அதிபராக நெல்சன் மண்டேலா தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டவுடன் தன்னை நிரந்தரத் தலைவராக மண்டேலா அறிவித்துக் கொள்ளவில்லை. முதலாவது பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் இரண்டாம் முறை போட்டியிட மறுத்துவிட்டார். பதவிக்குப் பின்னரான அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குக் கட்சித் தலைவராக மட்டுமே இருந்தார். பின்னர் 2004இல் பொது வாழ்விலிருந்தே விலகிக் கொண்டார். தாங்கள் பதவியிலிருப்பதற்காகவே நாட்டின் அரசியல் சட்டங்களை மாற்றும் தலைவர்கள் மத்தியில், அனைத்துப் பதவிகளையும் தங்களுக்கும், தங்கள் குடும்பங்களுக்குள்ளும் பங்கு போட்டுக்கொள்ளும் தலைவர்களுக்கு மத்தயில், ஆட்சியில் உள்ள காலங்களில் எவ்வளவு சொத்துக்களைச் சேர்த்துக்கொள்ள முடியுமோ அந்தளவுக்கு அனைத்தையும் செய்துமுடிக்கின்ற தலைவர்களுக்கு மத்தியில், வயதுவந்து தள்ளாடி நடக்கும் போதும்கூட பதவி விலகாது, அதிகாரக் கதிரையில்தான் உயிர்பிரிய வேண்டுமென்று ஆசை கொண்டு வீறாப்புப் பிடித்துத் திரியும் தலைவர்களுக்கு மத்தியில், தான் கொண்டிருந்த குறிக்கோளை அடைந்தவுடன், தென்னாப்பிரிக்கா நிரந்தரமாகத் தன்னுரிமை பெற்ற குடியரசாகத் தொடர்வதை உறுதிசெய்துவிட்டு, தனது கடமை முடிந்தது என்று அரசியலில் இருந்து ஓய்வுபெற்று நடையைக் கட்டிய கர்ம வீரர் நெல்சன் மண்டேலா.

27 ஆண்டுகள் மண்டேலா சிறைவாசம் அனுபவித்தபோது, கட்சியைக் கட்டிக் காத்து, போராட்டத்தின் வீரியம் குறையாமல் பாதுகாத்தவர் அவரது மனைவி வின்னி மண்டேலா. தென் ஆப்பிரிக்காவில் குடியரசு ஆட்சி அமைந்தபோது அதில் அமைச்சராகப் பொறுப்பும் ஏற்றார். அமைச்சரான பின்னர் மண்டேலாவின் மனைவி அதிகார போதை தலைக்கேறி அவர் மேற்கொண்ட ஊழல்கள் வெளி வந்த போது, சற்றும்கூட தயங்காமல், அதை மறைக்க முயலாமல் சட்டம் தனது கடமையைச் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டவர் நெல்சன் மண்டேலா. இதனால் அவரது குடும்ப வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது. தனிமையாகச் சிறைவாசம் அநுபவித்தவர், அதிலிருந்து விடுதலையானதும் தனிமையாகவே வாழ்க்கையை வாழ வேண்டிய நிலைமைக்கு உள்ளானார். உண்மையில் அவர் நினைத்திருந்தால் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது மனைவியை அவர் பாதுகாத்திருக்க முடியும். மனைவியின் தவறுகளை மன்னித்திருக்க முடியும். தங்களினதும், தங்களோடு சேர்ந்த கூட்டத்தினர்களினதும் தவறுகளையும், ஊழல்களையும் மறைத்து சுயநலத்துடன் நாட்டை தங்கள் சொத்து என்றே நினைத்து ஆட்சிசெய்கின்ற தலைவர்களுக்கு மத்தியில், பொது வாழ்க்கையில் நேர்மையும் தூய்மையும் பற்றி பலரும் வெறும் வார்த்தையால் பேசிக்கொண்டிருக்கையில் மண்டேலாவோ வாழ்ந்து காட்டினார்.

இந்த பெருமைகள்தான் மண்டேலாவை வரலாற்று நாயகனாக, உலகமே துக்கித்துக் கொண்டாடும் ஒரு தலைவனாக, விடுதலை வேண்டி ஏங்கும் எல்லா இனத்திற்கும் முன்னுதாரணமான தலைவனாக, விடுதலைச் சிற்பியாக, உண்மையான தேசத் தலைவனாக காட்டி நிற்கின்றது.

தேசமொன்றின் விடுதலைக்குக் கொள்கைகள் அவசியமே. போராட்டங்களும் அதற்கான முன்னெடுப்புக்களும் அவசியமே. பெருமை பேச வைக்கும் பண்பாடுகளும், கலாசாரங்களும் மிக அவசியமே. இவை அனைத்திற்கும் மேலாக அந்த தேசத்தையும், இனத்தையும் வழிகாட்டிச் செல்லும் ஓர் இலட்சியத் தலைவன் அவசியம். அந்த தலைவன் பேசுபவனாக அல்ல, வெறுமனே உறுதிமொழி வழங்குவதில் அல்ல, மக்கள் பெயரால் சுகபோகம் அநுபவிப்பதற்கு அல்ல. தானும் தனது குடும்பமும் ஆண்டாண்டு காலம் வாழ்வதற்கேற்ற வழிவகைகளைத் தேடுவதற்கல்ல, மாறாக, தன் இலட்சியத்தை அடைவதற்காக தன் உயிரைக்கூட இழப்பதற்கும் தயார் என்று அறிவித்த, அந்த இலட்சியத்திற்காக தனிமையில் 27 ஆண்டுகள் என்றாலும் கூட சிறைவாசம் அநுபவிக்கவும் தயாரான, மன்னிப்புக் கேட்டால் விடுதலை அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட போதும் சுயகௌரவத்தை விட்டுக்கொடுக்காது வாழந்த, தன் மரணம் வரை பதவிக்கு அப்பாற்பட்ட இலட்சியத் தலைவனாகவே வாழந்துகாட்டிய மண்டேலாவைப் போன்ற தலைவன் ஒருவன் அவசியம்.

தமிழினமும் மண்டேலா போன்ற தலைவர்களை எதிர்பாத்துக் காத்திருக்கின்றது. ஆயிரம் மண்டேலாக்கள் எம் தேசத்திற்கு எழுந்துவரட்டும். எங்கள் தேசம் தன்னிறைவு பெறட்டும்.

# ஈ.பி.டி.பிக்கு இனி என்னாகும்?

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தற்போது ஓர் இக்கட்டு நிலையைச் சந்தித்துள்ளது. கட்சியின் நீண்ட கால உறுப்பினரும் விசுவாசியும் மக்களால் நன்கு அறியப்பட்டவருமான நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்கிசியனின் கொலை ஈ.பி.டி.பிக்கு பெரிய தலையிடியாக வந்து விழுந்துள்ளது. ஈ.பி.டி.பி கட்சியின் மீதும் கட்சித் தலைமை மீது காழ்ப்புணர்வு கொண்ட பலருக்கும் ஈ.பி.டி.பி மீதான தங்கள் எதிர்ப்புணர்வை ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் வெளிப்படுத்த ஒரு அருமையான வாய்ப்புக் கிட்டியுள்ளது. இலங்கையின் மிக முக்கியமான ஊடகங்கள் அனைத்தும் இக் கொலை தொடர்பிலும் கொலைக்கு காரணமான சமூகப்பிறழ்வான நடத்தைகள் பற்றியும் விலாவாரியாக விபரிக்கத் தொடங்கியுள்ளன.

ஈ.பி.டி.பியினர் சார்ந்து கொலைக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுவது வழமையானவையாக இருந்த போதும் இம் முறை சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு என்பது மிக வேறுபாடானது. அதாவது ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் தனக்கு என்றும் ஒவ்வாத விருப்பற்ற விடயமாகப் பேசுவதும் புலிகள் மீது குற்றம் சாட்டுவதற்காகப் பயன்படுத்துவதுமான "சகோதரப் படுகொலை" என்ற வாசகம் இப்போது அவர் சார்ந்த வட்டத்துக்குள் அரங்கேறியிருக்கின்றது.

அதுமட்டுமன்றி கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கமல் தொடர்பில் கட்சி தற்போது எடுத்துள்ள முடிவும் கமல் மீதான குற்றச்சாட்டை கட்சி ஏற்றுக்கொண்டுள்ளமையை காட்டுகின்றது. வழமையாக ஈ.பி.டி.பி மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுக் களை மறுதலிப்பதை வழமையாகக் கொண்ட கட்சி இம் முறை ஏற்றுக் கொள்ளத்தக்க பிரதிபலிப்பை காட்டுவது வடக்குத் தேர்தலுக்குப் பின்னான ஈ.பி.டி.பியின் மாற்றங்களில் ஒன்றாகப் பார்க்கப்பட்டாலும் தங்கள் கட்சி சார்ந்த ஒருவரின் கொலை எனும் விதத்திலும் அவ் ஏற்றுக்கொள்ளல் அமைகின்றது.

ஈ.பி.டி.பி சார்ந்த கொலைக் குற்றச்சாட்டுக்கள் புதியவையல்ல. ஊடகவியளாளர் நிமலராஜனின் கொலை அதனோடு தொடர்புபட்டவராகச் சந்தேகிக்கப்பட்ட ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளராக இருந்த நெப்போலியன், பின்னர் சாவகச்சேரி சிறுவன் கமல்நாத் படுகொலை அதனோடு தொடர்புபட்டவராகச் சந்தேகிக்கப்பட்ட சாவகச்சேரிப் பிரதேச ஈ.பி.டி.பியின் அமைப்பாளர் சாள்ஸ், கொழும்பில் நடைபெற்ற அமைச்சர் மகேஸ்வரனின் படுகொலையும் அதனோடு தொடர்புடைய வசந்தன் என்பவர் ஈ.பி.டி.பியின் உறுப்பினர் என்பதான குற்றச்சாட்டும் ஈ.பி.டி.பியின் மீதான முன்னைய கொலைக் குற்றச்சாட்டுக்களில் குறிப்பிடத் தக்கவை.

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் எழுந்த போது ஈ.பி.டி.பி காட்டிய மறுதலிப்பு பலவிதங்களில் அமைந்திருந்தது. சாட்சிகளை அச்சுறுத்துவதும், நீதிபதிகளை இடமாற்றுவதும் என அவர்கள் குற்றச்சாட்டுக்களில் இருந்து மீள வெளியே வர பகீரதப் பிரயத்தனம் செய்திருந்தனர். ஆனால் இம் முறை நிலமை அவ்வாறு இருக்கவில்லை. ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் சவால்களை கண்டு அஞ்சாதவர் என அறியப்படுகின்ற போதும், அவர் தான் இப்போது மிகுந்த நெருக்கடியில் இருப்பதாக கூறுமளவுக்கு நிலமை தீவிரமடைந்துள்ளது. அத் தீவிரத்தை ஈ.பி.டி.பியின் தலமை உணர்ந்து கொண்டுள்ளதுடன் தனது கட்சியின் எதிர்காலத்தை காப்பாற்றுவதற்காக உடனடியாகவே பல நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

கட்சியை மறுசீரமைப்பது என்கின்ற முடிவில், பிரதேச ரீதியான அலுவலகங்களை மூடிவருவதும் குறிப்பாக ஈ.பி.டி.பியின் கோட்டையாகக் கருதப்படும் நெடுந்தீவு உள்ளிட்ட அலுவலகங்களை மூடும் முடிவும் ஆச்சரியம் தருவதாக அமைகின்றது. வடக்கு மாகாண சபை தந்த தேர்தல் தோல்வி மிகப்பெரிய பின்னடைவாக அமைய, கட்சிக்குள் அண்மையில் நடந்துள்ள இந்தப் பிரளயம் ஈ.பி.டி.பியின் எதிர்காலம் குறித்த அச்சவுணர்வை அதன் ஆரம்ப காலத் தலைவர்கள் மட்டத்தில் தோற்றுவித்துள்ளது. கட்சியைக் காப்பாற்ற வேண்டிய மிகுந்த நெருக்கடியை எதிர் கொண்டுள்ள அவர்கள் மறுசீரமைப்பு ஒன்றைச் செய்யவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

உண்மையில் ஈ.பி.டி.பியின் அரசியல் வளர்ச்சி என்பது ஒப்பீட்டளவில் கீழ் நோக்கி சரிவுப் பாதையில் செல்வது பல விடயங்களை ஆதாரமாக வைத்து நிறுவக் கூடிய தொன்று. கட்சியின் தலைமை அரசில் வகித்து வரும் அமைச்சுக்களின் தரமும் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக மாறியிருக்கின்றது. சந்திரிக்காவின் காலத்தில் வடக்கு கிழக்கின் ஏக அரச பிரதிநிதியாக புனர்வாழ்வு புனரமைப்பு மீள்கட்டுமானம் இந்து கலாசாரம் என பல துறைகளைக் கொண்ட அமைச்சராகவிருந்த டக்ளஸ் தேவானந்தா பின்னர் படிப்படியாக வலுக்குன்றி சமூகசேவைகள் என தற்போது பாரம்பரிய சிறுகைத்தொழிலில் வந்து நிற்கின்றார்.

ஈ.பி.டி.பி கட்சி சார்ந்த அரசியல் ஆதிக்கம், ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர் என்பது பின்னர் ஒன்றாகி அதன் பின் தமிழ்த் தேசிய வாதக்கட்சிகளிடையே ஏற்பட்ட பிளவுகளினால் தற்போது மூன்றில் நிற்கின்றது. அது போன்று முன்னர் வலி.வடக்குத் தவிர்ந்த உள்ளூராட்சி சபைகள் அனைத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ஈ.பி.டி.பி தற்போது தீவகத்தின் ஊர்காவற்துறை வேலணை நெடுந்தீவு ஆகிய மூன்றை மட்டும் கைப்பற்ற முடிந்திருக்கின்றது. எதிர்காலத்தில் அவற்றின் நிலையும் கவலைக்கிடமாக அமையலாம் என்பது கடந்த மாகாண சபைத் தேர்தலில் தீவகத் தொகுதியின் வாக்களிப்பு வகையிலிருந்து தெரிகின்றது. அதுபோன்றே யாழ்.மாநகர சபையும் எதிர்காலத்தில் கைநழுவ வாய்ப்புண்டு. இவ்வாறான சுய பரிசோதனைகளைச் செய்ய வேண்டிய நிலையிலுள்ள ஈ.பி.டி.பி தற்போது கட்சி மறுசீரமைப்புக் குறித்து சிந்திப்பது அவசியமானதே.

கட்சி பலமாகவிருந்த போது அப்போது யாழ்.மாவட்ட மக்களுக்கு நன்கு அறிமுகமாகவிருந்த நிசாந்தன்- மணி பல்லவராஜன், ஜெகன், மதனராஜன், திரிலோகநாதன்



போன்ற பலர் இப்போது ஈ.பி.டி.பியுடன் தொடர்பில் இல்லை என்பதும் ஈ.பி.டி.பிக்குப் பின்னடைவு. மறுசீரமைப்பில் அவர்கள் முக்கிய பொறுப்புக்களில் அமர்த்தப்பட வாய்ப்புக்கள் இருக்கலாம்.

அதுபோன்று சமூகப்பிரதிநிதிகளின் பங்களிப்பை கட்சி அரசியலுக்குள் கொண்டுவர ஈ.பி.டி.பி முயற்சிப்பதாகவும் அறியக்கிடைக்கின்றது. இருந்தும் தற்போதுள்ள நிலையில் அவ்வாறானவர்கள் ஈ.பி.டி.பியுடன் இணைந்து கொள்வார்களா என்பதும் சந்தேகமானதே. கடந்த மாகாண சபைத் தேர்தலில் வடக்கின் கல்விக் குழுவின் தலைவர் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கச் செயலர் என பல பதவிகளில் நியமிக்கப்பட்ட இரா. செல்வடிவேல் மாகாண சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி சார்பில் நிறுத்தப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையிலும் அதனை நம்பி செல்வடிவேலும் தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டிருந்த போதும் கடைசியில் அவருக்கான வாய்ப்பு நழுவியிருந்தது.

அதேவேளை மிகுந்த துணிச்சலுடன் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் விசப்பரீட்சை ஒன்றாக தேர்தலில் இறக்கப்பட்டார். இருந்தும் அவர் கணிசமான வாக்குகளைப் பெற்றதாகவும் செய்திகள் உண்டு. இதன் மூலம் கட்சி உறுப்பினர்களைத் திருப்திப்படுத்துவது என்பது ஈ.பி.டி.பி தலமைக்கு மிகப் பெரிய நெருக்கடியாகவிருந்து வருகின்றது என்பதை உணர முடிகின்றது. இந்நிலையில் தற்போது றெக்சியன் படுகொலை மிகப்பெரிய சவாலை உருவாக்கியுள்ளது.

சகோதரப் படுகொலையாக இது பார்க்கப்பட்டாலும் இக் கொலை நடந்துள்ள தளம் காலம் என்பதும் பல விடயங்களை தீர்மானிப்பதாகவுள்ளது. முன்னரும் ஈ.பி.டி.பி சார்ந்து சகோதரப் படுகொலைக் குற்றச்சாட்டுக்கள் இல்லாமல் இல்லை. தினமுரசின் ஆசிரியராகவிருந்து அதன் வளர்ச்சிக்கு வித்திட்ட ஊடகவியலாளர் அற்புதனின் கொலை தொடர்பிலும்

(தொடர்ச்சி பக்கம் 10)

# அகமும் புறமும்

## கிழக்கு மகாணத்தை கூட்டமைப்பு புறக்கணிக்கின்றது. அரியநேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களிடம் கிழக்கு மாகாணம் தொடர்பான அக்கறையும் அரசியல் செயற்பாடுகளும் குறைந்து வருவதாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான பா. அரியநேத்திரன் குற்றஞ்சாட்டுகின்றார். வடக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர், வடக்கு மாகாண சபைதான் தமிழ் மக்களுக்கான தீர்வு என்ற தவறான மாயை உருவாக்கப்படுவதாகவும், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்தப் போக்கு துரதிஸ்டவசமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

“வடக்கு மாகாண சபை தேர்தல் உட்பட அனைத்துத் தேர்தல்களிலும் வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடனான தீர்வைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்து தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றிருந்தது” என்று கூறியுள்ள பா.உ. அரியநேந்திரன். மேலும் தெரிவிக்கையில் “குறிப்பாக, வடக்கு முதலமைச்சர் தன்னை சந்திக்கும் ராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் வட மாகாணத்தையே முதன்மை படுத்திப் பேசுகின்றார். சில சந்தர்ப்பங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள்கூட வடக்கை முதன்மைப் படுத்தியே இத்தகைய சந்திப்புகளில் பேசியிருப்பதையும் எம்மால் அவதானிக்க முடிந்துள்ளது” என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

“கிழக்கு மாகாணத்திலும் இராணுவத்தினால் காணி அபகரிப்புகள், திட்டமிட்ட குடியேற்றங்கள், இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்திற்கான அனுமதி மறுப்பு போன்ற பிரச்சினைகள் இல்லாமல் இல்லை” எனவே வெளிநாட்டு இராஜதந்திரிகளையும், பிரதிநிதிகளையும் கிழக்கு மாகாணத்திற்கும் அழைத்துவருவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமை கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். குறிப்பாக, சம்பூர்ப் பிரதேச மக்களின் முழுமையான மீள்குடியேற்றத்திற்கு இந்திய உதவியுடனான அனல் மின்நிலையமும் ஒரு தடையாக இருப்பதால், இந்திய அதிகாரிகள் இலங்கை வரும் போது அவர்களை கிழக்கு மாகாணத்திற்கும் அழைத்துவந்து மக்களின் அவலநிலையைக் காட்ட வேண்டும் என்றும் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்படுவதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன் மறுத்துள்ளதுடன், இணைந்த வடக்கு-கிழக்குடன் தீர்வு என்ற நிலைப்பாட்டைத்தான் தாங்கள் சர்வதேச பிரதிநிதிகளிடம் வலியுறுத்தி வருவதாகக் கூறியுள்ளார். வடக்கு மாகாணத் தேர்தலுக்குப் பின்னர், மாகாணசபை முதலமைச்சருக்கு முக்கியத்துவம் அளித்து சர்வதேச பிரதிநிதிகள் அவரை சந்தித்து வருவதாகவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார். இந்த விடயம் குறித்து கூட்டமைப்பின் ஏனைய தலைவர்கள் என்ன கருத்துக்கூறுகின்றார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**உடையவன் இல்லை என்றால் ஒரு முழம் கட்டைதானே**

## கள்ளக் காதலிக்குத் தீ வைப்பு



பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவர் தனது கள்ளக் காதலியின் வீட்டுக்குத் தீ வைத்துக் கொளுத்திவிட்டு தானும் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு மரணமானவர் இரு பிள்ளைகளின் தந்தையென இனங் காணப்பட்டுள்ளார். இவரது சடலம் ஆனந்தபுரத்தில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. மரணமானவர் பொதுச் சுகாதார பரிசோதகராக முருங்கனில் கடமையாற்றி வந்துள்ளார். 2009ம் ஆண்டு இடம்பெயர்ந்து இராமநாதன் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த போது கிளிநொச்சியைச் சேர்ந்த பெண்ணொருவர் இவருக்கு உதவியாளராக இருந்துள்ளார். இப் பெண்ணுடன் இவர் காதல் கொண்டிருந்தார். இந்நிலையில் சொந்த இடங்களில் மீளக் குடியேறிய பின்பும் குறித்த பெண்ணின் வீட்டிற்கு அவர் சென்று வந்துள்ளார். இப்பெண் ஏற்கனவே திருமணமாகி ஒரு பிள்ளையுடன் கணவனைப் பிரிந்து வாழ்ந்து வருகின்றார். சம்பவ தினத்தன்று குறித்த பெண்ணின் வீட்டிற்குச் சென்ற சுகாதார பரிசோதகர், அவருடன் தகராறில் ஈடுபட்டுள்ளார். இருவருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து கோபமடைந்த அவர் அப்பெண்ணின் வீட்டிற்கு தீ வைத்துக் கொளுத்தியுள்ளார். அதன் பின்னர் பாழடைந்த வீடொன்றுக்குச் சென்று சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார். சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக தற்கொலைகளும், கொலைகளும் அதிகரித்துக்கொண்டே செல்வதைப் பார்த்து மக்கள் அச்சத்தில் உள்ளார்கள்.

**எங்கே செல்லும் இந்தப் பாதை**

## பொலிசாருக்கு எதிராக மக்கள் முறைப்பாடு




வட மாகாணத்திலுள்ள ஆறு பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என வட மாகாண தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணிப்பாளர் கே.தியாகராஜா தெரிவித்தார். நெல்லியடி, அச்சுவேலி, மானிப்பாய், கனகராயன் குளம், வவுனியா, இறம்பைக்குளம் ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு எதிராகவே இந்த முறைபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் பொதுமக்கள் ஒரு சிலர் தமது பிரச்சனைகளை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் மேற்கொண்டுள்ளனர். இருந்த போதும் எந்த விதமான நடவடிக்கைகளையும் பொலிஸ் நிலையத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச் சாட்டிலேயே குறித்த பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இதில் இரண்டு பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் மிகுதி நான்கு பொலிஸ் நிலையங்களில் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் நம்பிக்கைக்கு உரியவர்களாக பொலிசாரைப் பார்க்கின்றார்கள். ஆனால் அவர்களோ அதனை வருமானம் ஈட்டும் துறையாகத்தான் கருதி நடந்து கொள்கின்றார்கள். ஒரு சில பொலிசார் சேவை மனப்பான்மையுடன் நடந்துகொண்டாலுங்கூட வீதிகளில் நின்று வீதிநடைமுறைகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக பணத்தைச் சுரண்டுவதற் கென்றெ வீதிகளுக்கு வரும் பொலிசார் இருக்கும் வரை மக்களின் நீதி கிடைக்கப் போவதில்லை

**வேலியே பயிரை மேய்ந்தாற் போலும்**

## திருநெல்வேலி சந்தையின் பரிதாபமும் கண்டுகொள்ளாத பிரதேச சபையும்



சந்தையில் மழைபெய்யும் நேரங்களில் நீர் தேங்கி நிற்பதாகவும், இதனால் வியாபாரத்தை மேற்கொள்வது மிகச் சிரமமாக உள்ளதாகவும். தெரிவிக்கின்றனர். சந்தைக்குள் நடமாடுவதும், பொருட்களைக் கொண்டு செல்வதும் மிகக் கடினமாகவுள்ளதாத் தெரிவிக்கின்றனர். பெய்கின்ற மழை அனைத்தும் தங்கள் கடைக்குள் வருவதாகவும், பொருட்களைப் பாதுகாப்பது கடினமாகவுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். மேலும், முன்னைய காலங்களைப் போல திருநெல்வேலி சந்தையில் தற்போது வியாபாரம் நடைபெறுவதில்லை என்றும் கவலை தெரிவிக்கின்றனர். வியாபாரிகளுக்கு உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு பிரதேசசபை முன் வராததுடன், தங்களைக் கண்டு கொள்ள வில்லை என்றும் அங்குள்ள விவசாயிகள் கவலையுடன் முரசொலிக்குத் தெரிவித்தனர்.

**வாக்குக் கேட்க வருவார்கள் தானே**

**-யதார்த்தன் -**

இலவச இணைப்பு

நமது **முரசொலி** வார இதழின்

பிள்ளைகளுக்கான அன்புப் பரிசு

# வெற்றி முரசு 04

வினாப்பத்திரம் - I

ஆக்கம்




திரு.எஸ்.சந்திரகாசன்
மன்/கோவில்குளம்
அ.த.க பாடசாலை

**எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இத்தாளிலேயே எழுதுக**

**1-2ம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவிற்குச் சமனான உருவைத் தெரிவு செய்க**

01) 



02) 


**03ம், 04ம் வினாக்களின் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க**


03) (I) முதலை, ஓணான், பல்லி (II) காகம், கழுகு, ஆந்தை (III) மான், முயல், கிளி

04) (I) வவுனியா, மன்னார், சீனா (II) ஜப்பான், பிரான்ஸ், கனடா (III) யாழ்ப்பாணம், குருநாகல், அனுராதபுரம்

**எண்கள் இடப்பட்ட கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க**

05) 


(1) 39 (2) 24 (3) 25

06) 


(1) 52 (2) 26 (3) 81


**07ம், 08ம் வினாக்களில் தொடரில் அடுத்து வரக்கூடிய பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க**


அழகு → குருவி → விந்தை → .......................... (1) கருவி (2) விளக்கு (3) தையல்

08) மகவு → கதவு → தவறு → .......................... (1) வள்ளம் (2) வரவு (3) தரவு


09)  (1) 5 (2) 4 (3) 1

உருவில் காட்டப்பட்டவாறு சதுரத்தாளை கோட்டின் வழியே இரண்டாக மடித்து படம் 3ல் காட்டியவாறு வெட்டியபின்

10)  (1) உரு 1 (2) உரு 2 (3) உரு 3

இத்தாளை விரித்தபின் தோன்றும் விதம் 

**கீழே தரப்பட்ட உருவின் தொடர்பை அவதானித்து 11ஆம், 12ஆம் வினாக்களுக்கு விடையினை தெரிவு செய்க**




11) இரண்டு பாடத்தையும் கற்க விரும்புபவர்கள் எத்தனை பேர்?
(1) 13 (2) 8 (3) 25


12) தமிழ்ப்பாடத்தை மட்டும் கற்க விரும்புபவர்கள் எத்தனை பேர்
(1) 25 (2) 8 (3) 13

**சரியான விடையினைத் தெரிவு செய்க**

13) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு இப்பழமொழியின் கருத்து
(1) விடாமுயற்சி பலன் தரும் (2) பலசாலியும் தோல்வியடைவான்
(3) ஒற்றுமையே பலம்

14) நன்றி மறவேல் எனும்கருத்துத் தரும் பழமொழி
(1) உப்பிட்டரை உள்ளளவும் நினை (2) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
(3) அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்

ஒரு சதுரமுகியின் பல்வேறு முகங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. A,B, C, D, E,F எனப் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன



15) எழுத்து A க்கு எதிரான பக்கத்திலுள்ள எழுத்து யாது? (1) B (2)C (3) E

16) எழுத்து ரு க்கு எதிரான பக்கத்திலுள்ள எழுத்து யாது? (1) D (2) C (3) F

**வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க**

17) பரீட்சையில் .................................. அடைந்த மாணவன் .................................. யாது?
(1) சித்தி - மகிழ்ச்சியடைந்தான் (2) வெற்றி - மகிழ்ச்சியடைந்தான்
(3) தோல்வி - மகிழ்ச்சியடைந்தான்

18) போட்டியில் .................................. பெற்ற நிசாந் .................................. பெற்றான்
(1) சித்தி - பரிசு (2) வெற்றி - மகிழ்ச்சி
(3) வெற்றி - பரிசு

19) இரண்டு கம்பங்களுக்கிடையிலான தூரம் 8மீற்றர் எனின் 18 கம்பங்களுக்கிடையிலான தூரம் எவ்வளவு?

(1) 144 மீ (2) 136 மீ (3) 140மீ

20) ஒரு சதுர வடிவகக் காணியின் ஒரு பக்கம் பார்க்கும் போது15 தென்னைகள் தெரியும். எனவே அக்காணியைச் சுற்றியுள்ள தென்னைகள் எத்தனை?

(1) 56 (2) 60 (3)64

21, 22 ஆம் வினாக்களில் வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க

21) கணவனுக்கு மனைவி போன்று வீரனுக்கு ................................................................

(1)மருத்துவிச்சி (2) வீராங்கனை (3) வீராங்கை

22) ஆசிரியனுக்கு மாணவன் போன்று மருத்துவனுக்கு

(1) மருத்துவிச்சி (2) நோயாளி (3) மருத்துவனை

23) கடற்கரை ஓரங்களில் கல்வேலி அமைப்பதன் நோக்கம்

(1) படகுகளை நிறுத்தி வைப்பதற்கு (2) சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு

(3) மண்ணரிப்பைத் தடுப்பதற்கு

24) அன்று கடைகளில் மக்கள் கூட்டம் வழமையை விட அதிகமாக இருந்தன. இதற்குக் காரணம்

(1) அடுத்த நாள் பண்டிகை தினமாக இருந்தமை

(2) இலவசமாகப் பொருட்கள் வழங்கப்பட்டன

(3) பொருட்கள் விலை குறைவாக விற்கப்பட்டமை

**பின்வரும் தொடர்புகளில் ஒவ்வோர் உருவிற்கும் ஒரு பெறுமானம் உண்டு. அதற்கேற்ப 25ம், 26ம் வினாக்களுக்கு விடை எழுதுக**

25)

| |
|---|
| ○ × ○ = 16 |
| □ - ○ = 8 |
| △ + □ = 17 |

△ × ○ பெறுமானம் யாது? (1) 48 (2) 20 (3) 9

26) □ + ▱ = 20 எனின் ▱ இதன் பெறுமானம் (1) 7 (2) 12 (3) 8

**பின்வரும் நெய்யரில் உள்ள தகவல்களைக் கொண்டு 27, 28ம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | அ | எ | 9 | ஐ | 6 | த |
| 5 | 13 | 8 | மு | க | 7 | 1 |
| 22 | 18 | 2 | க | து | வ | 5 |

27) இங்கு தரப்பட்டவற்றில் இலக்கங்களை விட எழுத்துக்கள் அதிகமாயின் ஐ எழுத்தின் மேல் x இடுக. அவ்வாறு இல்லாவிடின் இறுதியாகவுள்ள 5 ஐச் சுற்றி வட்டமிடுக. அவ்வாறு இல்லா விடின் இறுதியாகவுள்ள 5 ஐ சுற்றி வட்டமிடுக

28) இங்குள்ள இரட்டை எண்களின் எண்ணிக்கை 4 எனின் அ எழுத்தைச்சுற்றி வட்டமீடுக. அவ்வாறு இல்லாது விடின் 18ற்கு நிறம் தீட்டுக


29ம், 30ம் வினாக்களுக்கு சரியான கோவையைத் தெரிவு செய்க

29) 6 x 5 (1) 3 x 2 x 4 (2) 4 x 2 x 4 (3) 2 x 3 x 5


30) 40 ÷ 8 (1) 18 ÷ 3 (2) 20 ÷ 4 (3) 20 ÷ 5

31) இவ்வுருவில் எத்தனை சதுரங்கள் வெட்டிப் பெறலாம்

(1) 18 (2) 9 (3) 12

32)  இவ்வுருவில் அதிகளவு காணப்படும் தள வடிவம்

(1) வட்டம் (2) முக்கோணி (3) சதுரம்

33)  இவ்வுருவிலுள்ள நாற்பக்கலின் எண்ணிக்கை

(1) 3 (2) 4 (3) 5

34) கீழ்வரும் இரு தொகுதிகளிலும் ஒரே ஒழுங்கிலும் சமமாகவும் உள்ளவையைத் தெரிக

(1) 5 க ட 8 ஒ து த — கட 5 8 ஒ து த

(2) கட 5 8 ஒது த — கட 5 8 ஒ த து

(3) 5கட ஒது த 8 — 5 கட ஒது த 8

35ம், 36ம் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையினைத் தெரிவு செய்க

35) (1) பசு வீட்டில் வளர்க்கும் பிராணி அது நான்கு கால்களை உடையது

(2) காகம் ஒரு பறவை அது தாவர உண்ணி

(3) மனிதன் இரண்டு கால் விலங்க அவன் முலையூட்டி வகைக்குள் உரியவன்

36) (1) கணனியால் எதனையும் சுயமாகச் செய்ய முடியாது

(2) தாமரை இலையின் மீது மெழுகு போன்ற படை காணப்படுவதால் அதில் நீர் ஒட்டாது.

(3) மண்புழு விவசாயிகளுக்கு நன்மை செய்யும் பிராணி பல்லி

37) 2012 ஆம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி புதன் எனின் ஜனவரி 30ம் திகதி என்ன நாள்?

(1) புதன் (2) வெள்ளி (3) வியாழன்

38) 5 வியாழக்கிழமைகள் உள்ள ஓர் ஜனவரி மாதத்தில் அந்த வியாழக்கிழமைத் தேதிகளின் மொத்தத்திற்கு இருக்கத்தக்க உயர்ந்த பட்சப் பெறுமானம் யாது?

39ஆம், 40ஆம் வினாக்களில் உரிய முறையில் சொற்கள் பிரித்து எழுதப்படாத வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. அவ்வாக்கியங்களிலுள்ளசொற்களை உரிய முறையில் பிரித்து கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக

39) நிழலி ன்அரு மைவெயி லில்தெ ரியும்

......................................................................................................................................

40) ஓவியங் கள்கண்ணு க்குவிருந் தளிப்பவை.

......................................................................................................................................

---

சேரல்:

அனுப்புவரின் பெயரும் முகவரியும்

.........................................................

.........................................................

.........................................................

.........................................................

நமது முரசொலி,
வெற்றிமுரசு,
பிரதான வீதி,
அளவெட்டி,
யாழ்ப்பாணம்.

# பலதும் பத்தும்

தொகுப்பு: வளர்மதி

## உங்களின் பாஸ்வேட் கவனம்

இன்று பலர் தங்களது தேவைகளை எளிதான முறையில் பூர்த்தி செய்து கொள்ள ஒன்லைன் சேவையை பயன்படுத்துகின்றனர். அவ்வாறு ஒன்லைன் சேவையைப் பயன்படுத்த தங்கள் கணக்கின் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி தங்கள் சேவைகளைத் தொடர்வார்கள். இவ்வாறு பயன்படுத்தப்படும் கடவுச்சொல்லை பல தொழில்நுட்பவின்னர்கள் திருடி அதனைத் தங்கள் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வார்கள். இவ்வாறு எளிமையான சொல்லை கடவுச் சொல்லாகக் கொடுத்தால் அந்த கடவுச்சொல்லை திருடத்தான் செய்வார்கள். எனவே அவர்களால் திருட இயலாத சொல்லை கடவுச்சொல்லாக கொடுக்க வேண்டும். அவ்வாறு திருடப்பட்ட சில முதல் 20 கடவுச்சொற்கள் இதோ:

123456, 123456789, password, admin, 12345678, qwerty , 1234567 , 111111 , photoshop, 123123, 1234567890, 000000, abc123, 1234, adobe, macromedia, azerty, iloveyou, aaaaaa, 654321




## "என்ன நான் சொல்றது"

சிறுத்தை பட இயக்குனர் சிவா இயக்கத்தில், தல அஜீத் நடித்து பொங்கலுக்கு திரைக்கு வர இருக்கும் படம் "வீரம்", படத்தின் நாயகி தமன்னா. தற்போது வீரம் படத்தின் இரண்டாவது டீஸரை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் "நல்லவன்னு சொல்வாங்க நம்பாதீங்க... கெட்டவன்னு சொன்னாலும் திட்டாதீங்க... என்ற பாடல் வரிகளின் பின்னணியில் அஜீத்தின் பல காட்சிகளைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். அந்த டீஸரின் இறுதியில் "என்ன நான் சொல்றது?" என்று அஜீத் கேள்வி கேட்பது போன்ற காட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம், "என்ன நான் சொல்றது?" என்ற வசனத்தை படத்தில் அடிக்கடி பயன்படுத்துகிறாராம் அஜீத் முக்கியமான விஷயங்களை அஜீத் பேசி முடித்ததும் இந்த வசனத்தை சொல்வதாக வைத்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இனி நீங்களும் அடிக்கடி சொல்லப் போகீர்கள் பாருங்கள் "என்ன நான் சொல்றது".

## திரைக்கு வருகின்றார் கப்டன் மகன்



விஜயகாந்த் இளையமகன் சண்முகப் பாண்டியன் ஹீரோவாகக் களமிறங்குவது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது முதல் படம் சகாப்தம், வரும் டிசம்பர் 12-ம் தேதி தொடங்குகிறது. இப்படத்தை கப்டன் சினி கிரியேசன் நிறுவனத்தின் சார்பில் எல்கே சுகித் தயாரிக்கிறார். நவீன் கேபிபி கதை எழுத வேலுமணி வசனம் எழுத டி . சந்தோஸ் ராஜன் இயக்குகிறார். இந்த படத்தின் பூஜை வரும் டிசம்பர் 12 வியாழக்கிழமை காலை 11 மணிக்கு சாலிக்கிரமாத்தில் உள்ள ஆண்டாள் அழகர் இல்லத்தில் நடைபெற்றது. விஜயகாந்த், பிரேமலதா மற்றும் திரையுலகினர் உட்பட கட்சிப் பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் பங்கேற்றனர்.

## பேஸ்புக்கில் வரப்போகுது Dislike ஒப்சன்

பேஸ்புக்கில் வரப்போகுது Dislike ஒப்சன் பேஸ்புக்கைத் தற்போது பயன்படுத்தும் அனைவருக்கும் லைக் (like) பற்றி நன்றாக தெரிந்திருக்கும் என நினைக்கிறேன் அதுதான் ஒருவருடைய கருத்து அல்லது போட்டோ உங்களுக்கு பிடித்திருந்தா லைக் பண்ணுவிங்களே அதான். இப்போ பேஸ்புக்கில் இருக்கிறவர்களுக்கு அடுத்த ஆப்பு சீக்கிரமே வரப்போகுது பாருங்கள். அது என்னவென்று கேட்டால், எப்படி ஒரு போட்டோ புடிச்சிருந்து லைக் பண்ணறீங்களோ அதே போல இனி ஒரு போட்டோ பிடிக்கலைனா டிஸ் லைக் (Dislike) என்றும் போட முடியுமாம்.

## முட்டாளின் முட்டாள்தனமான கருத்து

"இந்தியா ஒரு மூட்டைப்பூச்சி நாடு என்றும், பிரதமர் மன்மோகன் சிங் வயதான முட்டாள்" என்றும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஆர்.பி.சூரியபெரும வாய்க்கொழுப்பாக பேசியுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
காமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்வதாக உறுதியளித்த மன்மோகன் சிங் வராததைச் சுட்டிக்காட்டி நாடாளுமன்றத்தில் அவரை சூரியபெரும கடுமையாக விமர்சித்துப் பேசினார். இந்நிலையில், மன்மோகன் சிங் வயதான முட்டாள் என்றும், இந்தியா பெரிய நாடு அல்ல அது மூட்டைப்பூச்சி என்றும் சூரியபெரும கூறியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் சூரியபெரும, மன்மோகன் சிங்கை விமர்சித்த போது அமைச்சர் ஜி.எல் பெரீஸ் உட்பட பல அமைச்சர்கள், எவ்வித உணர்ச்சிகளையும் வெளிக்காட்டவில்லை. அதேபோல இங்கிலாந்து பிரதமர் டேவிட் கேமரூன் மூளையற்றவர் என்று கருத்து கூறியுள்ள சூரிய பெரும, ஒபாமாவையும் சர்ச்சைக்குரிய கருத்தினால் பேசியுள்ளார். எனினும் எதிரக்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, ரஞ்சன் ராமநாயக்க ஆகியோர் சூரியபெரும பேச்சைக் கண்டித்துள்ளனர்.
" நாட்டின் தலைவர்களை இவ்வாறு விமர்சிப்பது வெட்கப்பட வேண்டிய செயல்" என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

## உரிமைகளை மீறும்நாடுகள் அதிகரிப்பு

தத்தம் நாட்டு மக்களின் மனித உரிமைகளுக்கு ஆபத்தைத் தோற்றுவிக்கும் நாடுகளின் எண்ணிக்கை கடந்த ஐந்து ஆண்டுகளில் 20லிருந்து 34ஆக உயர்ந்துள்ளதாக உலக அளவில் ஆபத்துக்கள் பற்றி பகுப்பாய்வு செய்யும் ஒரு நிறுவனம் கூறுகிறது. பிரிட்டனிலிருந்து இயங்கும் இந்த மேப்பிள்க்ராப்ட் என்ற நிறுவனம், குறிப்பாக மத்திய கிழக்கு மற்றும் ஆப்ரிக்கப் பகுதியிலேயே இந்த அதிகரிப்பு நடந்திருப்பதாகக் கூறுகிறது. சிரியாவும் சூடானும் இந்தப் பட்டியலின் மேல் இடங்களில் இடம்பெறுகின்றன. பொருளாதார ரீதியாக சக்தி வாய்ந்த நாடுகளான இந்தியா மற்றும் சீனாவும்கூட இந்தப் பட்டியலில் மேல் பகுதியில் இடம் பெறுகின்றன. இந்த நாடுகளில் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்ந்து பாதிக்கப்படுவதாகவும், கருத்துச் சுதந்திரமும் பாதிக்கப்படுவதாகவும் இந்த ஆய்வு கூறுகிறது.

## கள்ளக்காதலி மீது கணவன் மோகம். கொளுத்தினார் மனைவி

கள்ளக்காதலி மீது உள்ள மோகத்தால் தன்னைக் கொல்ல முயன்ற கணவரைக் கீழே தள்ளி தீவைத்துக் கொளுத்திக் கொலை செய்தார் சென்னையைச் சேர்ந்த பெண். இந்தியாவின் சென்னை, கன்னிகாபுரம் பகுதியைச் சேர்ந்தவர் 28 வயதான பரத். இவருக்கு பவானி என்ற மனைவி. வாழ்க்கை மகிழ்ச்சியாக செல்கையில், பரத் இன்னொரு பெண் மீது மயக்கம் கொண்டார். அந்த மயக்கத்தில் மனைவியை உதாசீனப்படுத்தினார். எப்போதும் கள்ளக்காதலி நினைவாகவே இருந்து வந்தார். அவருடன் ஊர் சுற்றினார். இந்தத் தொடர்பு பவானிக்குத் தெரிய வந்து அதிர்ந்தார். கணவருடன் சண்டை போட்டார். இருப்பினும் பரத், தனது கள்ளக்காதலை விடவில்லை. மேலும் தீவிரமானார்.
இந்த நிலையில் 2 நாட்களுக்கு முன்பு நள்ளிரவில் கணவன், மனைவி இடையே சண்டை ஏற்பட்டுள்ளது. திடீரென பரத் அலறினார். இதைக் கேட்டு அக்கம் பக்கத்தினர் வீடு புகுந்தனர். அப்போது பரத் தீயில் கருகிய நிலையில் துடித்துக் கொண்டிருந்தார். இதையடுத்து அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். இருந்தும் பரத் உயிரிழந்தார்.
இறப்பதற்கு முன்பு அவர் கொடுத்த மரண வாக்குமூலத்தில்; நான் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது என் மனைவி மண் எண்ணெய் ஊற்றி தீ வைத்து விட்டதாக கூறினார். இதையடுத்து பவானியைப் பிடித்து பொலிசார் விசாரித்தனர். முதலில் தான் செய்ததை மறுத்தார் பவானி. பின்னர் ஒப்புக் கொண்டார். கள்ளக்காதலிக்காக கட்டிய மனைவியையே கொலை செய்யும் அளவுக்கு வந்து விட்டார் என்ற கோபத்தில்தான், அவரை தீ வைத்து கொன்று விட்டேன் என்று அழுதபடி கூறியுள்ளார் பவானி.

(கடந்த வாரத் தொடர்ச்சி...)

# கனேடிய மண்ணும் எம்மவர் வாழ்வும்

– இ.குமாரசாமி சர்மா –
(ஓய்வு நிலை உதவிப் பணிப்பாளர் )

இன்று நூற்றிற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் தமிழரால் நடாத்தப்படுகின்றன. நாடெங்கும் நூற்றுக்கணக்கான மேல்நாட்டு உணவகங்களைத் தமிழர் நடாத்துகின்றனர். ஒன்ராரியோ மாகாணத்தின் விற்பனைத் துறையிலும் தமிழர் ஆற்றிவரும் பங்கு வியப்புக்குரியது. தமிழரால் தமிழருக்கென நடாத்தப்படுகின்ற வணிகத் துறையின் வளர்ச்சி பெரும் ஆச்சரியத்துக்குரியது. 4000 வணிக நிறுவனங்கள் தமிழரை முதன்மைப்படுத்தி நடாத்தப்படுகின்றன. தமிழர் பெருமளவு குடியேறிய இடமான ஸ்காபரோவில் பல புதிய வணிக நிறுவனங்கள் திறக்கப்பட்டுள்ளன. வானொலி ஒலி பரப்பு சேவைகள், தொலைக்காட்சி சேவைகள் என்பன ஸ்காபரோவில் தமிழர்களால் நடாத்தப்படுவது பாராட்டிற்குரியது. ரொன்ரொ பகுதியில் வீடுகள் விற்பனையை தீர்மானிக்கும் சக்தியாக தமிழர் திகழ்கின்றனர்.



ரொன்ரோ பகுதியில் தமிழ் மாணவர் இல்லாத பாடசாலைகளே இல்லை எனலாம். கனடாவின் முதன்மையான பல்கலைக்கழகங்கள் யாவற்றிலும் தமிழ் மாணவர் பயில்கின்றனர். தமிழர்கள் தமது மொழி, மதம், உணவு, உடை, பழக்கவழக்கங்கள், கலை கலாசார இலக்கியங்கள் போன்ற தனித்துவம்மிக்க பல்வேறு பண்பாட்டு அம்சங்களைத் தங்குதடையின்றிப் பேணுவதற்கு கனடாவின் பன்முகப் பண்பாட்டுக் கொள்கை வழிவகுத்துக் கொடுத்துள்ளது.

தமக்கு விருப்பமான உடைகளை அணிந்து செல்வதற்கு எதுவித தடையும் கிடையாது. தமக்கு விருப்பமான கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் விழாக்களில் பங்கு கொள்வதற்கும் பூரண சுதந்திரம் உள்ளது. பல்வேறு கலைத்துறைகளில் தேர்ச்சியும் பயிற்சியும் திறனும் மிக்க கலைஞர்கள் பலரும் தத்தமது துறைசார் கலைகளை இளம் தலைமுறையினருக்கும் ஏனையோருக்கும் பயிற்றுவிக்கவும் அதனைத் தமது தொழிலாகக் கொண்டு பொருளீட்டவும் வாய்ப்பு வசதிகள் நிறையவே உள்ளன. இதன் விளைவாக ஏராளமான தனியார் நடனப்பள்ளிகளும் இசைப் பயிற்சி நிலையங்களும் பலராலும் நிறுவப்பட்டு அதன் மூலம் தாமும் முன்னேறி வருகின்றனர். ஈழத் தமிழ்ச் சமூகத்தவரின் கல்வி, பொருளாதார, சமூக பண்பாட்டு, கலை இலக்கிய அடிப்படையிலான நிலை இப்போது கணிசமான அளவு முன் னேற்றம் கண்டுள்ளது. இன்று கனடாவில் ஈழத் தமிழ் சமூகம்

புத்துயிர்ப்புடன் கிளிர்ந்தெழுந்து முன்னேறி வரும் ஒரு தனிக் குழுவாக விளங்குகின்றது. கனடிய வசதி வாய்ப்புக்களையும் வளங்களையும் சரிவரப் பயன்படுத்தும் சாதுரியம் மிக்க சமூகமாக தமிழ்ச் சமூகம் விளங்குகின்றது.

பல்லின மக்கள் வாழும் கனடாவில் ஒவ்வொரு இனத்தவரும் தத்தம் கலாசாரத்தைப் பேணும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வகையில் தமிழர் தம் கலை இலக்கியங்களைப் பேணவும் மற்றும் அரசியல் சமூகம் என்பன பற்றி எழுதவும் தமிழ்ப்பத்திரிகைகள் சஞ்சிகைகள் முதலான ஊடகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கனடிய நாட்டில் ரொன்ரோ மொன்றியல் கியூபெக் போன்ற இடங்களில் பெருமளவில் தமிழ் மக்கள் குடியேறி வாழ்கின்றார்கள். புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் தாங்களுக்குள் சிறிய திட்டங்களை வகுத்துக் கொண்டு படிப்படியாக படிமுறை வளர்ச்சி கண்டு பல்வேறு சமூக சமய அமைப்புக்கள் மூலம் தாயகத்திலும் தமிழ் மக்களின் தேவைகளுக்கு உதவி புரிந்து வருகின்றனர்.

நிரந்தர வதிவுரிமை பெற்றவர்கள் கனடியக் குடியுரிமை பெற்றவர்களாக பெருமளவில் மாறிக்கொண்டனர். குடும்ப இணைப்பு மூலம் அவர்களது குடும்ப அங்கத்தவர்களை கனடா வரவழைத்து அவர்களும் கனடிய பிரஜைகளாக மாறி வருகின்றனர். "ஸ்பொன்சர்" முறையில் ஏராளமானோரும் ஏஜன்டுகள் மூலம் இன்னும் ஒருதொகையினரும் கனடிய பிரஜைகளாயினர். சுருக்கமாகக் கூறின் தமிழர் எண்ணிக்கை 1987 - 2009 காலப்பகுதியில் கனடாவில் மிக வேகமாக அதிகரித்தது. கனடாவில் ஆங்கிலம், பிரெஞ் தவிர மக்களால் அதிகம் பேசப்படும் 25 மொழிகளுள் தமிழ் இடம் பெற்றுள்ளது. தமிழ் மொழி பேசுபவரின் எண்ணிக்கை 21 சத வீதத்தால் அதிகரித்துள்ளது. தங்கள் மொழியை பேணி வரும் மக்கள் குழுவில் பஞ்சாபியார்களுக்கு அடுத்து தமிழர்கள் இரண்டாவது இடத்தில் உள்ளனர். ரொறன்ரோ மாநகரத்தில் தமிழ் மக்கள் தொகை 5.7 சதவீதம் அதாவது 5வது இடம். மொன்றியலில் 12 வது இடம். கல்வி, கலை, செல்வம்,



பாதுகாப்பு என பற்பல காரணங்களுக்காக கனடா வந்து ரொன்ரோ நகரில் நிலைத்து விட்ட குடும்பங்கள் தாயகத்தின் அருங்கலைக் செல்வங்களை இப்பகுதி எங்கும் உருவாக்கியும் போற்றிப் பாதுகாத்தும் வருகின்றார்கள். அவற்றுள் முக்கியத்துவம் மிகுந்தவை தமிழர்களின் பண்பாட்டுத் தூண்களாய்த் திகழும் ஆலயங்களாகும். சமூக ஒன்று கூடலைப் பொறுத்தவரை கோயில்கள் மிகப்பெரும் தொண்டாற்றின. ஆரம்பத்தில் மொன்றியலில் வட இந்தியர்களால் நடத்தி வந்த சக்தி கோயில்கள் தான் அனைத்து ஈழத் தமிழ் இந்துக்கள் கூடும் இடமாக அமைந்திருந்தது. மொன்றியலில் ஸ்ரீ சுவாமி நாராயணன் மந்தீர் எனும் பெயருடன் பளிங்குக் கல்லால் மிகப் பிரமாண்டமாக அமைந்துள்ள ஆலயம் அனைவரையும் திகைக்க வைக்கின்றது.

ரொன்ரோவில் 1984 ம் ஆண்டு செல்வமலையில் (றிச்மண்ட் கில்) கனடாவின் முதலாவது இந்துக்கோவில் அமைக்கப்பட்டது. இங்கு ஒவ்வொரு வருடமும் பிள்ளையார், முருகன், சிவபெருமான், பெருமாள் என நால்வருக்கும் நான்கு தடவைகள் தேர்த் திருவிழாக்கள் பெருவிழாவாக கொண்டாடப்படுகின்றன. செல்வமலை விநாயகர் கோவில், கனடா கந்தசாமி கோவில், துர்க்கேஸ்வரம் துர்க்கை அம்மன் கோவில், ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரர் கோவில், சிவாவிஷ்ணு ஆலயம் என பல பல கோவில்கள் இங்கு அமைந்துள்ளன.

இங்குள்ள ஆலயங்களில் பக்தர்களுக்கு பிரசாத வகைகள் தாராளமாக வழங்கப்படுகின்றன. இவ் ஆலயங்களில் இசை, நடனம்,சமயம், கலை, கலாசார நிகழ்வுகள் நடாத்தப்படுவதன் மூலம் அவை யாவும் நன்கு வளர்ச்சி பெற ஆலயங்கள் காரணமாக அமைகின்றன. இதன் மூலம் கலைகள் சமய வாழ்வு எம்மை விட்டு அகலாமல் பாதுகாக்கப் படுகின்றது. இவ்வாறாக கனடாவில் தமிழ்ச் சமூகத்தவரின் மொழி, கல்வி, பொருளாதார, சமூக பண்பாட்டு, கலை கலாசார இலக்கியம் போன்ற அனைத்து அம்சங்களும் தனித்துவம் மிக்கனவாக கடைப்பிடிக்கப்பட்டு வருவது மிகவும் மகிழ்ச்சி தருவதாக அமைந்துள்ளது.



# கருத்தும் கணிப்பும்

நாட்டில் பாரியளவில் லஞ்ச ஊழல் மோசடிகள் இடம் பெறுகின்றமை அம்பலமானால், வெளிநாட்டு முதலீட்டாளர்களை எதிர்பார்க்க முடியாது. இலஞ்ச ஊழல் மோசடிகளினால் நாட்டின் பொதுமக்களே அதிகளவில் பாதிக்கப் படுகின்றனர் அத்துடன் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாரியளவில் பாதிப்பு ஏற்படுகின்றது. இலஞ்ச ஊழல் மோசடிகளைத் தவிர்க்க அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். லஞ்ச ஊழலை ஒழிப்பதற்கு போதியளவு சட்டங்கள் நாட்டில் காணப்படுகின்றன.

சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ

மக்கள்: தங்களுக்குத் தெரியாத சட்டம் எதுவும் இல்லை. அதில் எந்த சட்டம் நல்ல சட்டமோ அதன்கீழ் நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம் சட்டமா அதிபர் அவர்களே!

போர், அரசியல் மற்றும் மத ரீதியான பிரச்சினைகளினால் நிர்க்கதியாகும் மக்கள் இலங்கையை நோக்கிப் படையெடுக்கின்றனர். மாலைதீவு மொத்த சனத்தொகையில் 20 வீதமானவர்கள் இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர். விக்னேஸ்வரன் வடக்கில் சிங்களவர்களை குடியேற்ற விரும்பவில்லை. போரில் வெற்றி கொண்ட போதிலும் நாட்டின் எந்தவொரு நிலத்திலும் வாழும் உரிமை இன்னமும் கிட்டவில்லை.

கங்கொடவில சோம தேரரின் பத்தாம் ஆண்டு நினைவு நிகழ்வில் பங்கேற்ற போது அமைச்சர் சம்பிக்க ரணவக்க

மக்கள்: வடக்குமக்களே இன்னமும் வடக்கில் பூரணமாகக் குடியேறவில்லை. இதற்குள் எப்படி வெளியாட்களை குடியேற்றுவது அமைச்சரே?

இலங்கையில் போர் நடைபெற்ற போது தவறுகள் இடம் பெற்றனவா என்பதை அறிந்து கொள்ளும் தேவை எவருக்காகவது இருந்தால், இராணுவத்தின் சார்பில் ஆஜராகி நாட்டின் கௌரவத்தை பாதுகாக்க நான் தயாராக இருக்கின்றேன். எனினும் சில நபர்கள் தவறு செய்திருந்தால் அவர்களை நான் காப்பற்ற போவதில்லை. இராணுவத்தினருக்காக பேசுவேன். சகல சட்டங்களையும் மதித்து மனித உரிமைகளை பாதுகாத்து போரிடுமாறு நான் இராணுவத்தினருக்கு உத்தரவிட்டிருந்தேன்

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா

அந்த சில நபர்களுக்குள் நீங்களும் வருவீர்களா வரமாட்டீர்களா?

தென்னாபிரிக்க மக்களின் சமவுரிமை, நீதி, நிறம், இனம் என்பவற்றுக்காக நெல்சன் மண்டேலா தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார். இதன்மூலமே அவர் உண்மையான ஜனநாயகத்தை வென்றெடுத்தார். இந்நிலையில் நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை மற்றும் போராட்டங்கள் யாவும் இனத்தால் மதத்தால் பிரிந்து போயுள்ள நீதியற்ற ஏனைய நாடுகளின் தலைவர்களுக்கு பாடமாக இருக்கும்

இரா.சம்பந்தன் - தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

நீங்கள் எப்போது தலைவராக மாறப் போகிறீர்கள் சம்பந்தன் ஐயா அவர்களே!

வடமாகாணத்தில் தமிழ்மக்களின் நிலங்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக ஆக்கிரமித்திருக்கும் படையினர் மக்களின் வீடுகளை கண்மூடித்தனமாக அழிப்பதன் மூலம் அடிப்படை மனித உரிமையினை மீறியிருப்பதுடன், இனவிகிதாசாரத்தை மாற்றும் வகையில் சிங்களக் குடியேற்றங்களையும் மேற்கொண்டுவருகின்றனர்.

சி.வி.கே சிவஞானம், அவைத்தலைவர் - வடமாகாணம்

என்ன செய்யலாம் சொல்லுங்கள் ஐயா!

இந்த மதிப்பீடு தமிழ் மக்களின் இழப்புக்களையும், அழிவுகளையும் முறையாக காண்பிக்கவில்லை. மிக மோசடியான முறையில், தயாரிக்கப்படுகின்றது என்பதை சகல ஆதாரங்களுடனும் நாம் சர்வதேச நாடுகளின் தலைவர்களுக்கு நேரடியாகவும், எழுத்து மூலமாகவும் வெளிப்படுத்த தயாராகிக் கொண்டிருக்கின்றோம். – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

உங்க ஆரம்பம் எல்லாம் நல்லாத்தான் பினிசிங் சரியில்லையேப்பா

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண நியமிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படும் நாடாளுமன்ற தெரிவுக்குழு அரசாங்கம் நடத்தும் நாடகம். அத்துடன் இந்த தெரிவுக்குழு பிரச்சினைக்கு தீர்வை வழங்காமல் காலத்தை வீணடிக்கும் மற்றுமொரு தெரிவுக்குழு மட்டுமே.

க.சுரேஸ்பிரேமச்சந்திரன் - பா.உ. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இந்த நாடகத்தில் நீங்க வேசம் போடாமல் இருந்தால் ஓகே.

வரலாற்றில் மிகவும் பலவீனமான வெளியுறவுக் கொள்கைகளைக் கொண்டதே தற்போதைய அரசாங்கம்

ம.சுமந்திரன் - பா.உ. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

உங்களின் உள்நாட்டுக்கொள்கைகளும் பலவீனமானவைதானே!

ஜெனிவாவில் அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறும் மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டுக்கு முன்னதாக, இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தொடர்பான சட்டமூலத்தில் திருத்தங்களை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்

மனித உரிமைகள் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மாஹஹாநாம ஹேவா

அப்போ, எங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் சட்டத்தைத் திருத்தவில்லை. அப்படித்தானே!

வெளிநாடுகள் முன்வைக்கும் சகல யோசனைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது நாட்டுக்கும் பொருந்தாது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

வெளிநாடுகளிடம் கடன்களை வாங்குவதற்கு மட்டும் அனைத்திற்கும் தலையாட்டுகின்றீர்களே.

## போய் வா மடிபா!

மரணத்தின் மடியில் ஓய்வெடுக்க
ஒழிந்தோடி போ மடிபா,
இறப்பென்ற இறகுகள் இனியுனக்கொரு ஓய்வு
படுக்கையே,
நெடும் பயணத்தின் களைப்புண்டாய் நீ
உனக்கு வயது தந்த இளைப்பாறுதலே இந்த பயணம்
விடுதலைதேடி விரைந்து செல்லும் எதிர்காலத்தின்,
வியர்வைத் துளிகளில் உன் நெடும் பயணம் தொடரும்...
இனியுனக்கு மரணமென்பதில்லை மடிபா!
போய் வா ஓய்வாய்!
கண்ணீர் உன் இளைப்பாறுதலுக்கான காணிக்கையே
அல்ல,
காலம்தோறும் விடுதலை காக்கும் கரங்களில்
உன் உழைப்பு வாழ்ந்து கொண்டே இருக்கும்
சிறைக்கம்பிகளில் சினேகம் வளர்த்துக் கொண்டு,
நிறங்களுக்கு இடையில் நட்பு வளர்த்தவன் நீ,
எந்த இருளும் உனக்கு முடிவு தந்துவிடப் போவதில்லை,
எந்த ஒளியும் உன் பிரகாசத்தை மூழ்கித் தொலைக்கப்
போவதுமில்லை
காலங்களின் கைகளில் நீ விடுதலைச் சின்னமாய்
வீற்றிருப்பாய்,
என்றும் உனக்கு மரணம் மட்டும் இல்லை மடிபா!
போய் வா ஓய்வாய்!

- பொ.கோபிநாத் -

## குடியேறிகளின் கதை 07

ஊரிலிப்போது
எல்லோர் தொழிலும்
கூட்டம்தான்.

திங்கள் தொடங்கினால்
சன்னதாயும் பெரிதாயும்
சில மணிநேரக் கூட்டத்திற்காய்
முழுநாளும் ஒய்வுதான்.
சனி வரை நீளும் நெடுந்தொடர்.

குட்டாயம்
போயேயாக வேண்டும்.
படிவங்கள் நிரப்பியேயாக வேணடும்.
கைநாட்டு இட்டு இட்டே
கட்டைவிரலில்
ரேகைதேய்ந்துபோனதாய்
புலம்புவது
காதில் விழுகிறது.

பத்துப் படிவம்
பதினைந்துஒப்பம்
இருபது இணைப்பாவணம்
இவ்வளவும் இருந்தேயாகவேண்டும்.

ஒருஏக்கர்
நெல் விதைக்கவிதைநெல்லுக்காய்
ஒன்பதுநாள் அலைந்து
பத்திடத்திலுறுதிசெய்து
கொண்டதாயும்
சலிப்பேதுமேயில்லாமல் சொல்கிறபக்குவத்தை
இவர்களுக்குத் தந்தவரார்?


வாரத்திலிருநாள்
சமூகவேலை-
வீதியோர வாய்க்காலைவெட்டி
வீதியிலிட வேண்டும்.
மழைகழுவி மீண்டும்
பிறந்தகம் போன மண்
இடுத்த ஐப்பசி வரையும்
பிறந்த வீட்டிலேயே ஆறியிருக்கலாம்.

ஒரேநாளினை
இரு நிறுவனங்கள்
காலை மாலையென பகிர்வதுமுண்டு.
மதிய உணவு
அனேகமாய்ப் பாண்தான்...
என்பதால்
கடையில் பாணிருப்பதேயில்லை.

பசளைக்குப் பலமைல்
சென்றுவருகையில்
பாதிவயலைப் பல்லால்
கட்டாதமாடுகள்
அறுவடைசெய்திருக்கும்.
வேலித்திட்டம்
கட்டாயம் வருமாம்
தைக்குப் பிறகு.

இதற்கிடையில்
நிறுவனதலைமைகள்
குழம்பிப் போயுள்ளனராம்
அவசரதொழிற் கடன்
பெறத்தக்கோர் பட்டியலும்
கசிப்புவடிப்போரென இனங்காட்டி
காவல்துறைக்குப் போனபட்டியலும்
ஒன்றாயிருக்கிறதாம்....
யாருக்குயார்
எதையெதைச் செய்வதாம்?

- கை.சரவணன் -



# வெள்ளை இருட்டை விலக்க வந்த கறுப்பு நிலா

"உண்மையான தலைவர்கள் தங்கள் மக்களுக்காக தங்களது அனைத்து சுதந்திரங்களையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டும்."

இப்படிச் சொன்னவர் வேறு யாருமல்ல இந்த இலக்கணப்படியே வாழ்ந்து காட்டிய நெல்சன் மண்டேலா தான்!

தன் நாட்டு மக்கள் அனைவரும் சம வாய்ப்புகளோடு சம உரிமை பெற்று வாழ வேண்டும் என்பதற்காக மண்டேலா 27 ஆண்டுகள் சிறையில் இருந்தார். அவரது சிறைவாசமே போராட்டமாகத் தொடர்ந்தது. மக்களுக்கான போராட்டம். உலகில் நிறவெறிக்கு இடமில்லை என உணர்த்திய போராட்டம். அகிம்சை ஆயுதத்தின் மூலம் ஆதிக்க வெறியை அமைதியாக சாய்க்கலாம் என உணர்த்திய போராட்டமாகவும் அது அமைந்தது.

1990-ம் ஆண்டு அவர் சிறையில் இருந்து விடுதலை ஆனபோது, அது மனிதகுலத்தின் விடுதலையாகக் கொண்டாடப்பட்டது. அவரது கை விலங்குகள் அகன்றபோது தென் ஆப்பிரிக்காவில் கறுப்பர்கள் கைகளில் இருந்தும் இனப்பாகுபாடு எனும் விலங்கு அகன்றது.

1994-ம் ஆண்டு அவர் தென் ஆப்பிரிக்காவின் முதல் கறுப்பின அதிபரானபோது, நினைத்துப் பார்க்க முடியாத வரலாற்று சாதனையாகவும் அது அமைந்தது. முதல் முறை அதிபரான பிறகு இரண்டாம் முறை பதவிக்கு வராமல் இருந்த போதும் மண்டேலா மீண்டும் ஒரு முறை முன்னுதாரணமாக மாறினார்.

எல்லா விதங்களிலும் மண்டேலாவின் வாழ்க்கையே முன்னுதாரணமானதுதான். இந்த மகத்தான மனிதரின் வாழ்க்கை 1918-ம் ஆண்டு துவங்கியது. தென் ஆப்பிரிக்காவின் கிழக்கு முனையில் உள்ள வேசோ (Mvezo) எனும் கிராமத்தில் மண்டேலா பிறந்தார்.

ஹோசா (Xhosa) மொழி பேசிய தெம்பு இனக்குழுவின் தந்தை குழுவின் தலைவருக்கு ஆலோசகராக இருந்தார். மண்டேலாவின் இயற்பெயர் ரோலிலாலா மண்டேலா (Xhosa). பின்னர் ஞானஸ்தனத்தின்போது ஆசிரியர் அவருக்கு நெல்சன் எனும் ஆங்கிலப் பெயர் வைத்தார்.

மண்டேலாவுக்கு 9 வயதானபோது அவரது தந்தை இறந்துவிட்டார். குழுவினத் தலைவர் அவரை தத்தெடுத்து வளர்த்தார். கிராமத்தில் இருந்து மாகாணத் தலைநகருக்கு குடிபெயர்ந்தவர், வெஸ்லியன் மிஷன் பள்ளியில் படித்தார். இங்கு ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர், தடகளம் மற்றும் குத்துச்சண்டையிலும் புலியாக இருந்தார்.

இதனிடையே, மண்டேலாவுக்கு திருமண ஏற்பாடு நடக்கவே, அதில் இருந்து தப்பிக்க அவர் தலைநகர் ஜோகன்னஸ்பர்க்கிற்கு வந்துவிட்டார். அப்போது அவருக்கு 23 வயது.

இரண்டு ஆண்டுகள் கழித்து விட்ஸ் வாட்டரண்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சட்டம் பயின்றார். தலைநகர் வாசம் தான் அவருக்கு தனது நாட்டில் நிலவிய வெள்ளையர் ஆதிக்கத்தையும், நிறவெறியின் கொடுரத்தையும் உணர்த்தியது. இதன் பயனாக அரசியலில் ஆர்வம் ஏற்பட்டு, ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸில் சேர்ந்தார். பின்னர் இக்கட்சியின் இளைஞர் பிரிவையும் நிறுவினார். 1944-ல் மண்டேலா எவ்லின் மாசே (Evelyn Mase) என்பவரை திருமணம் செய்து கொண்டார். 1944-ல் நடந்த இந்த திருமணம் 1958-ல் முறிந்துவிட்டது.

1952-ல் மண்டேலா ஆலிவர் டாம்போ எனும் நண்பருடன் சேர்ந்து வழக்குரைஞராக தொழில் துவங்கினார். இருவருமாக சேர்ந்து நிறவெறிக்கு எதிராகவும் போராடினர். வெள்ளையர்கள் மட்டுமே உறுப்பினராக இருந்த ஆளும் தேசிய கட்சிக்கு எதிராக அவர் உறுதியுடன் போராடினார்.

1956-ல் அவர் மீது தேசத் துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் 155 பேர் மீதும் குற்றம் சாட்டப்பட்டது. இந்த வழக்கு நான்கு ஆண்டுகள் நடைபெற்று அவர் விடுவிக்கப்பட்டார்.

அப்போது அறிமுகம் செய்யப்பட்ட பாஸ் லாஸ் எனும் சட்டம் கறுப்பர்கள் எங்கே வசிக்கலாம் எங்கே பணிபுரியலாம் என கட்டுப்பாடு விதித்து இனப்பாகுபாட்டை மேலும் மோசமாக்கியதால் போராட்டமும் தீவிரமானது. இதனிடையே 1958-ல் மண்டேலா வின்னியை திருமணம் செய்து கொண்டார். அதன் பிறகு போராட்டத்திலும் மண்டேலாவுடன் துணை நின்ற வின்னி அவரது நீண்ட சிறைவாசத்தின் போதும் அவரது விடுதலைக்காக குரல் கொடுத்தார்.

1960-ம் ஆண்டு ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி தடை செய்யப்பட்டதால் மண்டேலா தலை மறைவாகி போராட்டத்தை தொடர்ந்தார். அதே ஆண்டு வெள்ளையர் அரசின் அடக்குமுறை உச்சத்தை தொட்டது. ஷார்பேவில்லே பகுதியில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 69 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

தென் ஆப்பிரிக்காவின் ஜாலியன்வாலாபாக்காக அமைந்த இந்தப் படுகொலையால் வெகுண்ட மண்டேலா அகிம்சை முறையை கைவிட்டு பொருளாதார தடை போராட்டத்தை அறிவித்தார். அப்போது அவர் கட்சியின் துணைத்தலைவராக இருந்தார். தென்னாப்பிரிக்க அரசு அவரை தீவிரவாதி என முத்திரை குத்தி அரசை கவிழ்க்க சதி செய்த்தாகவும் குற்றம் சாட்டியது. அவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டு 1964ம் ஆண்டு வாழ்நாள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ரோபன் தீவுகளில் அவரது சிறைவாசம் ஆரம்பமானது. 18 ஆண்டுகள் அங்கு கொடிய சிறை வாசத்தை அனுபவித்த பிறகு 1982-ல் நாட்டின் பிரதான பகுதியில் இருந்த போல்ஸ்மூர் சிறைக்கு மாற்றப்பட்டார். சிறைவாசத்தின் ஆரம்ப காலத்தில் அவரது தாய் மற்றும் மூத்த மகன் இறந்து மரணச் சடங்கில் கூட பங்கேற்க மண்டேலா அனுமதிக்கப் படவில்லை. சிறையில் சுண்ணாம்புக் கல் உடைப்பது உட்பட கடினமான வேலைகளை செய்தார். எல்லா இன்னல்களையும் தனது மக்களுக்காக பொறுத்துக் கொண்டிருந்தார்.

இதனிடையே, தென் ஆப்பிரிக்காவில் நிறவெறிக்கு எதிரான போராட்டம் மண்டேலாவின் விடுதலை எனும் ஒற்றை குறிக்கோளுடன் தீவிரமானது. தன் மக்களின் உரிமை போராட்டத்துக்காக சிறை வாசம் அனுபவிக்கும் அந்தத் தலைவரை விடுதலை செய்ய வலியுறுத்தி உலகம் முழுவதும் ஆதரவு வலுத்தது. 1988-ம் ஆண்டு லண்டல் வெம்பிலி மைதானத்தில் 72,000 பேர் திரண்ட மாபெரும் இசை நிகழ்ச்சி மண்டேலா விடுதலைக்காக குரல் கொடுத்தது.

ஒரு மனிதரின் விடுதலைக்காக இந்த அளவுக்கு ஆதரவு உண்டானதில்லை என கூறும் அளவுக்கு மண்டேலாவுக்காக அகில உலகமும் குரல் கொடுத்தது. இதன் பயனாக 1990-ம் ஆண்டு மண்டேலா சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். தென் ஆப்பிரிக்கா நிறவெறியில் இருந்து விடுபட்டது.


1962ம் ஆண்டு தனக்கு எதிரான வழக்கு விசாரணையில் தானே ஆஜராகி வாதாடிய மண்டேலா, "எல்லா மக்களும் நல்லிணக்கத்தோடு சம வாய்ப்புகளோடு வாழும் சுதந்திரமான ஜனநாயக சமூகம் அமைய வேண்டும் என்பது என் லட்சியம். இந்த லட்சியம் நிறைவேறுவதை பார்க்க வாழ வேண்டும். தேவைப்பட்டால் இந்த லட்சியத்திற்காக உயிரையும் கொடுப்பேன்" என முழங்கினார்.

இதைச் செயலிலும் காட்டி தென் ஆப்பிரிக்க மக்களுக்கு நிற வெறியில் இருந்து விடுதலை வாங்கித் தந்து புது வாழ்வு மலரச்செய்தார்.

விடுதலைக்குப் பிறகு வெள்ளையர்களுடன் அவர் நடத்திய பேச்சுவார்த்தை மன்னிப்பை அடிப்படையாக கொண்டு அமைந்திருந்தது. இதுவே அந்நாட்டில் முதல் சுதந்திர தேர்தலுக்கு வழிவகுத்து அவரை மக்கள் அதிபராக்கியது. 1994ல் அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு பொது வாழ்க்கையில் இருந்து பெரும்பாலும் விலகி வாழ்ந்து வந்த மண்டேலா நோயோடு போராடிக் கொண்டிருந்தார். இதுவும் சிறைவாசம் தந்த பரிசு தான். சிறையில் இருந்தபோது அவர் காசநோயால் பாதிக்கப்பட்டார். நோயுடனான அவரது போராட்டம் முடிவுக்கு வந்து 95-வது வயதில் அவரது உயிர் பிரிந்தது.

தென் ஆப்பிரிக்கா அதன் மகத்தான புதல்வரை இழந்துவிட்டது என அவரது மரணச் செய்தியை அறிவித்த அந்நாட்டு அதிபர் ஜுமா குறிப்பிட்டார். தென் ஆப்பிரிக்கா மட்டுமா, ஒட்டு மொத்த உலகமும் அதன் மகத்தான புதல்வரை இழந்துவிட்டது.



- வளர்மதி -

## சிரஞ்சீவியாக 15

பல்துறைக் கலைஞன்

# அமரர் டானியல் முருகேசு வேதாரணியம்

கலைஞன் வாழ்ந்தான் இறந்தான் என்றில்லாது வாழ்நாளில் இசையோடு தன் பங்களிப்பை வழங்கி மறைந்தவர்தான் அமரர் டானியல் முருகேசு வேதாரணியம் என்ற இசைக்கலைஞன். இயற்கையான இசை ஞானம்கொண்ட இவர் பத்து வயதிலேயே பாடும் ஆற்றல்மிக்கவராகத் திகழ்ந்தார். இவர் பாடுவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் அண்ணாவி ஆழ்வாப்பிள்ளை என்ற மாமனாரும், மைத்துனர் வைத்தியர் கோவிந்தசாமியும் ஆவார்கள்.

இசையோடு நாடகத்திலும் சிறப்பான இடத்தைப் பெற்றுக்கொண்டார். 1954ம் ஆண்டு இலங்கை வானொலியில் இசைப்பாடகர் தேர்வில் சித்தியடைந்து அன்று முதல் பிரிவு பாடகனாக வானொலிக் கச்சேரிகளில் பங்கேற்றார். தனது இயற்கை ஞானத்தால் வாழ்நாள் நிறைவுறும்வரை இசை நிகழ்ச்சிகளில் கர்நாடக இசைப் பாடல்களைப் பாடி பாராட்டை பெற்றுக் கொண்டார். இதேவேளை இலங்கை வானொலியில் பக்தரஞ்சனி, திருமுறைப் பாடல், பண்ணிசை நிகழ்ச்சியிலும் பாடியதனூடாக வானொலி ரசிகர்களின் பாராட்டையும் பெற்றுக் கொண்டார் .நமது கிராமத்து வதிரி பூவற்கரையான் மீது பக்திகொண்டு தேவாரத் திருவாசகம் பாடி தன் பக்தியை வெளிப்படுத்தி ஒரு அடியானாகத் திகழ்ந்து வாழ்ந்தார்.

இசையோடு இசை நாடகத்திலும் தன் பங்களிப்பை வழங்கினார். பாடலும் ஆடலும் சேர்ந்ததே இசை நாடகமாகும் என்ற கருத்துக் கொண்ட வேதாரணியம் அவர்கள் பாடசாலைக் காலத்திலேயே இசைப் போட்டிகளிலும் நாடகங்களிலும் பங்குபற்றிப் பாராட்டை பெற்றவராவார். அவரது யௌவனப் பருவத்திலிருந்து, கிராமத்து அண்ணாவிமாராயத் திகழ்ந்த பல்கலைப் பண்டிதர் கிருஸ்ணபிள்ளை ஆசிரியர், கலாவிநோ தன் அண்ணாசாமி ஆசிரியர், நாடகக் கவிஞர் சண்முகநாதன், கரவெட்டி நாடக கவிமணி கிருஸ்ண

ஆழ்வார், "சீனாப்பானா" இராசரத்தினம் போன்றோரிடம் நாடகக் கலை பயின்றார். கலாவிநோதன் பெ.அண்ணாசாமியின் ஒரு நாடகத்தில் தனது பத்து வயதில் பால்யவீரன் வேடமேற்று நடிக்க ஆரம்பித்த அவர் இளைஞனான பின்னர் பல இசைநாடகங்களில் நடித்தார். கலாவிநோதன் அண்ணாசாமி, இரணியன் திரவியம், நடிகமணி வைரமுத்து ஆகியோரின் நாடகங்களிலும் தன் இனிய பாடலாலும், நடிப்பாலும் பெரும் பாராட்டையும் பெற்றார்.

ஒரு தமிழ் ஆசானாகத் தன் பணியை ஆரம்பித்த அவர் ஆங்கில ஆசானாகவே மாணவர்களால் அறியப் பட்டார். ஆங்கில அறிவை இந்தியாவைச் சேர்ந்த ஆசிரியர்களிடத்தில் கற்று ஆங்கில உச்சரிப்பை அழகாக மாணவர்களுக்குப் பேசவைத்தார். ஒய்வு பெற்ற போதும் ஆங்கில ஆசானாக வகுப்புகளை நடாத்தி வந்திருந்தார். நல்ல ஆசானாய், இசை மற்றும் நாடகக் கலைஞனாய் வாழ்ந்து தனது எண்பத்தைந்தா வது வயதை அண்மிக்கும்போது தனது கரவெட்டி கலட்டியில் இறைபதமடைந்தார்.

வாழும்போது எப்படி பேசப்பட்டாரோ, அவ்வாறே அவர் எம்மை விட்டுப்பிரிந்து பின்னரும் அவர் புகழ் பேசப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## பொதுச் சொத்தைக் களங்கம் பண்ணாதீர்

"இப்படியாகவே போயிற்று, எங்கள் காலம்."
இதைச் சொல்லிவிட்டுக்
களைப்பாய் எழுந்தார் கதைசொல்லி.
இறந்ததையும் வருவதையும் புனைவதே
பிழைப்பாய்க் கொண்டோர்

இந்தக் கசகரணம் கெட்டவர்கள்.
த(ன்)னைத் தொலைத்து அதுவாகிக்,
கரைதலைக்காணவிடாக் கரும்புள்ளிகள், - இந்தக்
கருத்துக் கந்தசாமிகள்.

அடுத்தவர் உணர்வையும்
ஒய்ந்த பொழுதுகளையும் உண்டு செமிப்போர்.
உனக்குப் பட்டது உன்னோடு.
ஒருபோதும், நான், நீயாக முடியா.
பட்டறியின் படுதல், சுய இழப்பின்றி வேறில்ல.
இன்பம்,மட்டுமல்ல, அழுகையையும் தான்.

எதையுமே, நினைவில் இருத்தி
யாரும் இங்கு, கொள்ளவில்லை-நீ,
அடிக்கிற மாதிரி, அடி!- நான் அழுவுற மாதிரி....-இது
நடிப்பல்ல, வாழ்வு.
வாழ்தல், குழந்தை போல வேஷம் தரியா.
எந்தக்குழந்தையும், வாயால் சிரித்து கண்டவர் யாருமில்லை.

களிப்புக் குழந்தைக்கு கற்றலே தலைச் சுமை
வாழ்தலுக்குக் கற்றல், விளக்கொளியில் சூரியன் பார்த்தல் போல.
ஒளி இருந்தாலும் இல்லாதுபோயினும்
தரிசனைக்கு தலையின்றிய அவரவர், மனம் வேண்டும்.
புத்தியால், பரவசப் பாக்கியமில்லை.

புத்தர், தமிழரல்ல, ஏன் சிங்களமுமல்ல.- அவர்
ஒருகுழந்தை, அனைத்தும் அறிந்தபின்,
பற்றுகள் அறுத்து — மீளப்பிறந்த பிள்ளை.
அனைத்து மானிடரின் அகல் விளக்கு.
பொதுச் சொத்தைக் களங்கம் பண்ணாதீர்.

- எஸ்.நஸீறுதீன் -

## கர்மவீரர் மண்டேலா

1994இல் தென்னாப்பிரிக்காவில் இனவெறி ஆட்சி அகற்றப்பட்டு, குடியரசு அமைந்தவுடன் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நெல்சன் மண்டேலா, தன்னை நிரந்தரத் தலைவராக அறிவித்துக் கொள்ளவில்லை. இரண்டாம் முறை போட்டியிட மறுத்து விட்டார். அடுத்த ஐந்து ஆண்டுகள் கட்சித் தலைவராக மட்டுமே இருந்தவர், 2004 இல் பொது வாழ்விலிருந்தே விலகிக் கொண்டுவிட்டார். தான் கொண்ட குறிக்கோளை அடைந்து, தென்னாப்பிரிக்கா நிரந்தரமாகத் தன்னுரிமை பெற்ற குடியரசாகத் தொடர்வதை உறுதிசெய்துவிட்டு, கடமை முடிந்தது என்று நடையைக் கட்டிய கர்மவீரர் நெல்சன் மண்டேலா.

## நேர்மையும் தூய்மையும்

27 ஆண்டு காராகிருகவாசம் அனுபவித்தபோது, கட்சியைக் கட்டிக் காத்தவர், போராட்டத்தின் வீரியம் குறையாமல் பாதுகாத்தவர் அவரது மனைவி வின்னி மண்டேலா. தென் ஆப்பிரிக்காவில் குடியரசு ஆட்சி அமைந்தபோது அதில் அமைச்சராகப் பொறுப்பும் ஏற்றார். அமைச்சரான தனது மனைவி அதிகார போதை தலைக்கேறி செய்த ஊழல்கள் வெளி வந்தபோது, சற்றும் தயங்காமல், அதை மறைக்க முயலா மல் சட்டம் தனது கடமையைச் செய்யப் பணித்தவர் நெல்சன் மண்டேலா. இதனால் அவரது குடும்ப வாழ்க் கை பாதிக்கப்பட்டது. தனிமைச் சிறையிலிருந்து விடுதலையானதும் தனிமை வாழ்க்கை வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவர் நினைத்திருந்தால் தனது மனைவியைப் பாதுகாத்திருக்க முடியும். தவறுகளை மன்னித்திருக்க முடியும். பொது வாழ்க்கையில் நேர்மையும் தூய்மையும் பற்றி பலரும் பேசுவார்கள். நெல்சன் மண்டேலா வாழ்ந்து காட்டினார்.








## 27 ஆண்டு கடந்தும்

ஐந்து ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இல்லாமல் போனால், அடையாளம் தெரியாதவர்களாகிவிடும் அரசியல் தலைவர்களுக்கு மத்தியில், 27 ஆண்டுகள் போராட்டக் களத்திலிருந்தும், மக்கள் மத்தியிலிருந்தும் அகற்றப்பட்டு, தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டபோதும், அந்தத் தலைவனால் உயிர்ப்புடன், மன உறுதி தளராமல், கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்க முடிந்தது என்பதுதான் நெல்சன் மண்டேலாவை ஏனைய தலைவர்களிலிருந்து அகற்றி நிறுத்துகிறது. அண்ணாந்து பார்க்க வைக்கிறது.

எங்கடை வெப்சைட்டுகள் செய்யிற வியாபாரத்தைப் பாக்கேக்கை அழுகிறதோ? சிரிக்கிறதோ எண்டு தெரியயில்லைப் பாருங்கோ. சிலபேர் தங்கடை சிலுசிலுப்பைக் காட்டுறதுக்கு செத்ததுகளின்ரை மானத்தையும், உயிரோடை இருக்கிறவையின்ரை நின்மதியையும் கூறுபோட்டு விக்கினம். கிட்டடியிலை ஒரு ஊடகம் பிரதேச மட்ட பெண் அதிகாரியள் மாவட்ட மட்ட பெரிய அதிகாரியோடை மாலை நேரத்திலை மகிழ்ச்சியாய் இருக்கினம் எண்டு எழுதிவிட வேறை சிலது அந்த நியூசைக் கொப்பி பண்ணிப்போட, நின்மதியாய் இருந்த குடும்பங்கள் சிலது சின்னாபின்னப்பட்டுப் போய் நிக்குதாம். ஆரெனும் ஒண்டு, இரண்டு இப்பிடி எடுபட்டிருக்குங்கள் எண்டதை நான் மறுக்கையில்லைப் பாருங்கோ. அதுக்காக பொறுப்பில்லாமல் ஒட்டு மொத்தமாய் எல்லாரையும் விரல் நீட்டிப் பொதுப்படையாய் பேசிறது பொருத்தமில்லைக் கண்டியளோ!

இன்னொரு வெப்சைட் போர்க்குற்ற ஆதாரம் எண்டு தனியாய் கொலம் போட்டு அதிலை எங்கடை செத்துப்போன பொம்பிளைப் பிள்ளையளின்ரை ஒட்டுத்துணிகூட இல்லாமல் கிடக்கிற சடலங்களை ஏலம் விட்டிருக்குது. நாங்கள் செய்ய ஏலாத காரியத்தை எங்கையோ இருக்கிற வெள்ளைக்காரக் கனவான் செய்திருக்கிறார். காட்டவேண்டிய எல்லா ஆதாரங்களையும் அந்தாள் காட்ட வேண்டிய எல்லாருக்கும் காட்டிப்போட்டுது. இன்னும் காட்டப்போறார் எண்டும் கதை உலாவுது. பிறகேன் நீங்கள் சடல வியாபாரம் செய்யிறியள். செத்துக்கிடக்கிற பொம்பிளையளிலை உங்கடை அக்கா, தங்கைச்சி, மனிசி எண்டு ஒருதரும் இல்லை எண்டதுக்காக பிண யாவாரம் செய்யிறதே? ஊடகம் எண்டது கொஞ்சம் சமூகப்பொறுப்போடை சிந்திக்கிறது நல்லது எண்டு நான் சொன்னால் ஆரும் கேக்கப் போகினமே?.

"ஒரு காலத்திலை அரசாங்க அதிகாரி எண்டால் சனம் எவ்வளவு மரியாதையாய் பாத்தது கந்தோருகள் எல்லாம் இப்ப யாவாரம் செய்யிற இடங்களாய் மாறிப்போச்சுது" எண்டு வன்னிப் பென்சனியர் ஒருத்தர் வேதனைப்பட்டார். மனிசன் எதைச் சொல்லுது எண்டு விளங்காமல் வாயைக் கிளற அவர் துப்பின விசயங்களாலை ஆடிப் போனன் பாருங்கோ. கன இடங்களிலை பிரதேச நிர்வாகத்துக்குப் பொறுப்பானவை மண்ணோ, மரமோ யாவாரம் செய்யிற தெண்டால், கட்டிடம் கட்டுறதெண்டால் நான்தான் செய்ய வேணும் எண்டு அடம் பிடிக்கினமாம். மரம் தறிக்கப் பாஸ் குடுத்திட்டு, அதைத்திருப்பி வாங்கிப்போட்டு கள்ளமரம் வெட்டுகினம் எண்டு காவல்காக்கிறவையிட்டைக் கையைக் காட்டி விடுகினமாம். வீட்டுத்திட்டம் வந்தால் மண்ணும் மரமும் என்னட்டைத்தான் வாங்க வேணும் எண்டு கட்டாய யாவாரம் செய்து கட்டியடிக்கினமாம். இப்பிடி நீளமாய்க் கனகதை சொல்லுது மனிசன்.

# சுவாமி வம்பானந்தா

புரிந்தால் புன்னகை செய், புதிர் என்றால் புருவம் உயர்த்து
பிதற்றல் எனத் தோன்றின் பிழையும் திருத்து...
- கமல்ஹாசன் -



பெரிய மட்டத்திலை இருக்கிற மாவட்டத்தை ஆளுற அதிகாரியிட்டை இதைப்பற்றி சனம் கனதரம் சொல்லியும் சிரிச்சுப் போட்டுத்திரியிறாராம். பிரதேச நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர் மேல் மட்டத்துக்கு தகவல் சொன்னவரின்ரை தாயைக் கூப்பிட்டு காதைப்பொத்தி இரண்டு குடுத்தனான் எண்டு சொல்லித்திரியிறாராம். தன்னோடை கொளுவினால் நாலாம் மாடிக்கோ, வீட்டையோ தான் அனுப்புவன் எண்டு பிடரியைச் சிலுப்புறாராம். எந்த மண்ணிலை நிண்டு சிலுப்புறியள் எண்டது விளங்காமல் சிலுப்புறியள். எல்லாம் காலம். வேறை என்னத்தைச் சொல்லுறது.

பள்ளிக்கூடங்கள் லீவு விட்டிட்டுது. இருந்தாலும் சிலபள்ளிக்கூட பிறின்சிப்பல்மாரும் அவையின்ரை சிப்பாயளும் லீவுக்கையும் மூச்சுவிட நேரமில்லாமல் வேலை செய்யினம். விசாரிச்சுப் பாத்ததிலை புதுவருஷத்துக்குப் பிள்ளையளைச் சேர்க்கிற வேலை நடக்குதாம். வசதியான பள்ளிக் கூடங்களிலை கூட்டம் அலை மோதுது. ஊர்ப்பள்ளிக்கூடங்களிலை காகமும் பறக்கக் காணம்.

ஒரு இடத்திலையும் வைச்சிருக்கேலாத வாத்திமாரையும், பிறின்சிப்பல்மாரையும் போடுகிறதுக் கெண்டே சில பள்ளிக்கூடங்களை வலயங்கள் வைச்சிருக்குது. அந்தப்பள்ளிக்கூடங்களுக்கு சனம் பிள்ளையளை விடுமோ? கிட்டடியிலை டாக்குத்தர்மாரை பெரிய ஆஸ்பத்திரியிலை இருந்து சின்ன ஆஸ்பத்திரியளுக்கு இடம் மாத்தின மாதிரி சின்ன வகுப்புக்குப் படிப்பிக்கிற வாத்திமாரை வசதியான பள்ளிக் கூடங்களிலை இருந்து ஊர்ப்பள்ளிக் கூடங்களுக்கு மாத்திப்பாத்தால் என்ன?

காவல்காக்கிறவை எண்டால் பெரிய அதிகாரிக்கு சின்ன அதிகாரி சலூட் அடிக்கிறது பொதுவான மரியாதை. இதைச்சில இடங்களிலை கொஞ்சம் வேறை மாதிரியும் செய்யிறவை. ஆகக் கடைசியாய் வந்த முறையைக் கேட்டால் சிரிப்பாய்க் கிடக்குது. பெரிய அதிகாரியைச் சின்ன அதிகாரி முழங்கால் படியிட்டு விழுந்து கும்பிட்டும் மரியாதை செய்யலாம் எண்டு ஞாயிறு நேரப் பேப்பர்க்காரப் பொடியன் படம் பிடிச்சுப் போட்டிருக்குது. சிலபேர் இதிலை இனவாதமும் இருக்கெண்டு சொல்லுகினம். இருக்கட்டும் அதைவிடுங்கோ.

நிக்கிற பெரிய அதிகாரி வீட்டைபோடுகிற மாதிரி உடுப்போடை நிக்க காவல்காக்கிற சீருடையோடை நிக்கிற கழுதை விழுந்து கும்பிட்டிருக்குது. ஆரையோ கேவலப்படுத்துறம் எண்டு நினைச்சு அந்த உடுப்புக்கு இருக்கிற மரியாதையைக் கேவலப்படுத்திப் போட்டாங்கள் எண்டு எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் வெம்பி வெதும்பிறார். ஏதோ இவ்வளவு நாளும் அந்த உடுப்பின்ரை மரியாதையைக் காப்பாற்றினவை எண்டு நினைச்சுக் கொண்டு இவர் திரிஞ்சிருக்கிறார்.

நீளத்தீவிலை இருந்து தியேட்டர்க் குறூப்பை வெளிக்கிட வேண்டாம் எண்டு சனம் ஆர்ப்பாட்டம் செய்ததல்லோ. எங்கடை துன்ப துயரங்களிலை எங்களை மீட்டது நீங்கள்தான், எங்களை விட்டிட்டுப்போய் எங்களைத் தண்டிச்சுப் போடாதையுங்கோ. எண்டெல்லாம் கடதாசி மட்டையிலை வசனம் எழுதிப் பிடிச்சிருந்ததுகள். போட்டிருந்த போட்டோவிலை நிண்ட சனத்தைப் பாத்தனிங்களே. வாயெல்லாம் பல்லாய் சிரிச்சுக் கொண்டு நிக்குதுகள். ஐயா போகாதைங்கோ, போகாதைங்கோ எண்டு சிரிச்சுக் கொண்டு நிக்குதுகள். நடிகர் ஜனகராஜின்ரை சொந்தக்காரரோ தெரியாது.

சனம் சொல்லியும் கேளாமல் விட்டிட்டு வந்திட்டினமல்லோ. இதுக்கிடையிலை தியேட்டர்க் குறூப்பை முழுசாய்க் கலைக்கிறதைப்பற்றியோ சிக்கினம் எண்டு ஒரு கதை உலாவுது கேள்விப் பட்டனிங்களே. எப்பிடி இருந்த மனிசன், உண்மையோ, பகிடியோ ஒரு காலத்திலை சகோதரப் படுகொலைக்கு எதிராய் சத்தமாய் குரல் குடுத்தவர், கொஞ்சம் கொஞ்சமாய்த் தேஞ்சு கூட இருந்ததுகளாலை இண்டைக்கு இப்பிடிப் போச்சுது எண்டு சனம் கதைக்குது. சாணவிறாட்டி வைச்சுப் பளிங்கு மாளிகை கட்ட ஏலாது பாருங்கோ.

நாடகக்குழுவையும், வடக்கின்ரை சபையையும் தேடித்தேடிப் பிழைபிடிக்கிறதுதான் என க்கு வேலையோ? எண்டு ஒருநண்பர் ஈ-மெயிலிலை கேட்டிருந்தவர். அவருக்குச் சொல்லுற பதிலை உங்களுக்கும் சொல்லுவம் எண்டு நினைச்சனான். நாடகக்குழுவோடை எனக்கு ஒரு விரோதமும் இல்லைப்பாருங்கோ. அவையோடை போட்டி வியாபாரத்துக்கு போற நோக்கமோ, தேவையோ எனக்கில்லை. கருவாட்டுக் கடையிலை கற்பூரம் விக்கினம். அந்த அருவருப்புத் தாங்கேலாமல் சில விசயங்களை எழுதுறது பிழையெண்டால் அந்தப்பிழையை மறக்காமல் தொடர்ந்து செய்வன் பாருங்கோ!

நாடகக்குழு நல்ல சுப்பர்மாக்கற், ஆனால் ஒண்டுக்கொண்டு பொருத்தமில்லாத ஏராளம் சரக்குகள் சோடியாய் விக்கினம்.

எங்கடை பொடியள் தியாகியள் அந்தத் தியாகங்கள் வீணாகக்கூடாது - பொடியளும் போர்க்குற்றம் செய்தவை நாங்கள் அவையை ஏற்றுக் கொள்ளவே இல்லை

சர்வதேச விசாரணை வேணும் - நாங்கள் மனிசனும் மனிசியும் எங்கடை பிரச்சனையை நாங்கள் பாப்பம் வேறை ஒருத்தரும் தலையிடக்கூடாது.

தாயகம், தேசியம்,தன்னாட்சி இதுகள் சரிவராட்டில் தனிநாடு - ஐக்கியமான தேசத்துக்குள்ளை ஒற்றையாட்சி

ஒருபோதும் இணங்கிப்போகமாட்டம், - நல்லிணக்கத்துக்காக சேர்ந்து செயல்படுவம், அலரி மரத்தடியிலை சத்தியமும் செய்வம்

இந்த மாதிரி ஒத்துப்போகாத சரக்குகள் ஏராளம் இருக்குது பாருங்கோ, இந்த யாவாரம் நெடுக நடக்காது. ஊரிலை இவையை விட்டால் வேறை நல்ல கடையில்லைப்பாருங்கோ, இருந்த ஒரு பெட்டிக்கடையையும் பூட்டப் போகினமாம், எண்டதுக்காக சனம் கருவாட்டு நாத்தத்துக்கை கற்பூரம் வாங்குது எண்டதைச் சொன்னால் என்னைத்திருத்த வாறியள், முதல் கடையை ஒழுங்கு படுத்துங்கோ. அதுக்குப்பிறகு நான் ஒண்டும் கதைக்க மாட்டன்.

தொடந்து நமது முரசொலியோடை இருங்கோ,
உங்களுக்குத் தெரிஞ்ச அநியாயம்,
நியாயத்தையும்
vampanantha@gmail.com க்கு
எழுதுங்கோ. அடுத்த பேப்பரிலையும்
சந்திப்பம்.

# ஈ.பி.டி.பிக்கு . . .

(03 பக்கத் தொடர்ச்சி)

பின்னர் அவரது பொறுப்பில் இருந்த, ஒரு காலத்தில் புலிகளின் ஈழநாதம் பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் இருந்த சின்ன பாலா என அறியப்படும் பாலநடராஜ ஐயர் படுகொலையும் ஈ.பி.டி.பியின் சகோதரப் படுகொலைகளாக பலராலும் பேசப்படுவதுண்டு. ஆனால் இதுவரை இக் கொலைகளுக்கு புலிகளே காரணமென ஈ. பி.டி.பி கூறிவருகின்றது. ஆனால் அப்போது நிலமை அவ்வாறில்லை. றெக்சியனின் கொலைக்கு காரணங்கள் எதுவும் சொல்லி தப்ப முடியாத இக் கட்டு நிலைக்கு ஈ.பி.டி.பி தள்ளப்பட்டுள்ளது.

இந்த முக்கிய சந்தியில் ஈ.பி.டி.பியின் உயர் மட்டம் எடுக்கவுள்ள முடிவுகள் கட்சியைக் காப்பாற்றுவதற்கானது மட்டுமன்றி தன்னையும் காப்பாற்றிக் கொள்வதாக அமையும் என்பது அரசியல் அவதானிகளின் கருத்து. கழுத்துக்கு மேலே தொங்கும் கத்தியாக வந்துள்ள றெக்சியனின் படுகொலை தான் ஈ.பி.டி.பியின் அரசியலுக்கான முற்றுப்புள்ளி என பேசப்பட்டாலும் புதிய பாதைகளைத் திறக்க ஈ.பி.டி.பி முயலும் என்பதும் தவிர்க்க முடியாது ஏற்றுக்கொள்ளப்படும் உண்மையாகும்.

றெக்சியன் படுகொலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்ந்தும் கண்டனங்கள் வந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகவுள்ள நிலையில் ஈ.பி.டி.பியின் அடுத்த நகர்வுகள் உன்னிப்பாக எதிர்பார்க்கப்படுகின்றன. என்ன நடக்கும் ஈ.பி.டி.பியின் எதிர்காலம் என்னாகும் பொறுத்திருந்து பார்ப்போம்.

- சதுரங்கன் -

- பொன்காந்தன் -

# நான்காவது தமிழ்

செத்துவிடவில்லை செல்லம்மா புருசன்
பத்து தலையர் போல்பலங்கொண்டு வந்தான்
இத்துவிடவில்லை அவர் தந்த உச்சம்
இளவல் எனக்கிங்கு ஏறுமா அச்சம்.

முண்டாசு தலையர் போல்முறுக்கேறி நின்றேன்
மூச்சு நின்றாலும் தமிழாலே உதைப்பேன்
வண்டாகி தேனாகி வழியவும் கதைப்பேன்
வானரம் வந்தாலோ வதம் செய்து முடிப்பேன்.

மண் சாதிப்பாட்டை மதிக்காது போனால்
பெண் சாதி கூட பிரியட்டும் போபோ
என் சாதி தமிழர் இழிவுற்றுப்போக
இதயத்தில் இன்பத் தேன் வந்து விழுமா.

பின்வந்தாரெல்லாம் பேரின்பகடலில்
முன்வந்த நீயோநாய் போலத் தெருவில்
புண் தந்த நோயை வைத்துளாய் அருகில்
பூக்குமா உன் வாழ்வில் விடியல்தான் விரைவில்.

மற்றவர் மடிய மகுடிகள் ஊதி
உத்தமராகும் ஊழ்வினையெதற்கு
சித்தங்கள் சிறகுகள் விரித்து
முத்தமிழ் மகிழ முழுமையாய் வா

வேண்டாக்கதிரை விருப்புகொண்டு
மாண்டார் கனவை மாய்த்து நின்றாய்
நான்காம் தமிழை நாட்டியிங்கு
வேண்டாபுரளி வீசுகிறாய்.

உன்னை நோக்கி விரலை நீட்டு
நீ தான் எதிரி நெஞ்சில் தீட்டு
உண்மைதன்னை எடுத்துக்காட்டு
உலகம் வியக்க தேரை ஓட்டு

என்னை அறிய அன்னை தமிழ்
தமிழே எங்கள் முன்னை புகழ்
திண்ணை வரையும் தீராத்தமிழ்
தமிழாய் இருந்து என்றும் மகிழ்.

## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை

# கப்பல் ஓட்டிய தமிழர்கள் 8

– இராஜகோபால் –

அப்போது பிரதான துறைமுகமாக வல்வெட்டித்துறையும். அடுத்துப் பருத்தித்துறை, காங்கேசன்துறை, ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம் ஆகியனவும் திகழ்ந்தன.

அக் காலத்தில் பாய்க்கப்ப்ல் கட்டுவதில், கைதேர்ந்த கலைஞர்களாகத் திகழ்ந்தவர்கள் பலர். அவர்களில் சிலரைக் குறிப்பிட்டுத் தான் ஆக வேண்டும்.

வேலுப்பிளளை மேஸ்திரியார்.

வடிவேலு மேஸ்திரியார்,

சின்னத்தம்பி மேஸ்திரியார்,

போன்ற சிலரை என்னால் இன்னமும் மறக்கமுடியாமல் இருக்கிறது.

நவீன முறையில், கப்பல்களை உருவாக்கிய பெருமை இவர்களையே சேரும்.

150 தொன் தொடக்கம், 200, 250 தொன் வரையான மூன்று பாய்மரக் கப்பல்கள் பிரசித்தி பெற்றன.

அந்தக் கப்பல்களில் சேர்டிபிக்கேற் பெற்ற காப்டன் அரண்டாவது காப்டன் கப்பல் செலுத்தும் சுக்கானியர், கிலாசு, சமையல்காரர் போன்றவர்கள் கடமையாற்றுவார்கள்.

முழுக்க முழுக்க வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களே சகல வேலைகளையும், துணிகரமாகவும், நேர்மையாகவும், செய்து வந்தார்கள்.

ஜப்பான்காரன் குண்டுபோட்ட போது, நீர் மூழ்கிக் கப்பலால் பாய்மரக் கப்பலை சிதறடித்த போது கடலுக்கு அர்ப்பணித்த வல்வெட்டித்துறை வீரர்கள் பலர்! சிதறடிக்கப்பட்ட கப்பலின் ஒரு துண்டைப் பிடித்துக் கொண்டு தப்பிய வல்வெட்டித்துறைச் சாமிக்கண்டு மேஸ்திரி என்பவரை நான் சந்தித்து பேசிய போது திகில் நிறைந்த பயங்கர அனுபவங்களை எனக்குச் சொன்னார்.

சமையல்க்காரராகக் கப்பலில் சென்ற ஒருவர் ஒரு காலைப் பயங்கரத் தாக்குதலின் போது இளந்து உணிருடனையே வல்வெட்டித்துறை திரும்பிய கதையைக் கேட்ட போது, என் கண்களில் நீர் வழிந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

மறைந்த தண்டையல்கள் பலரின் வீரசாகசங்களைக் கேட்டறிந்து வியந்தேன்.

அவர்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தண்டையல்கள் சிலரின் அனுபவங்களைக் கேட்டறிந்தேன்.

### அத்தியாயம் 09

அந்தக் கப்பலில் இருபத்திரண்டு போர் அடங்கியவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.

பொன்னையாகந்தசாமித் தண்டையலும், சிவசுப்ரமணியம் தண்டையலும் கப்பலின் காப்டன்கள்.

கப்பலை திருத்தி அமைப்பதற்காக ஆந்திராவிலுள்ள காக்கி நாடாவுக்கு ஏச். ஏ. காட்டூன் என்ற அக் கப்பல் சென்று கொண்டிருந்தது.

சென்னைக்கு மேல் எண்பத்தைந்து மைல் தூரத்தில்-

ஒரு வெள்ளிக்கிழமை-

பயங்கரச் சூறாவளி!

பாய்கள் சுக்குநூறாகின,

கப்பல் நொருங்கி சின்னாபின்னமாகியது,

கப்பலுக்குள் இருந்த ஒரேயொரு படகில்,

அந்த இருபத்திரண்டு போரும் உயிரே தஞ்சமெனப் பிடித்துக் கொண்டார்கள்!

சிலரது உடலில் ஆடையே இல்லை!

ஆண்டவனே அபயம் என்பதைத் தவிர, அவர்களுக்கு வேறொரு துணையுமில்லை!

மூன்று நாட்கள்.

உடல் தொய்ந்து, அறிவு மயங்குகின்ற நிலைமை.

வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடியில் வசித்த அந்த மனிதர் தமக்கு ஏற்பட்ட அந்த பயங்கர அனுபவத்தை என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

இப்போது எண்பத்தைந்து வயதிருக்கும் அவருக்கு.

திருச்சிற்றம்பலம் சீனி வாசகம் என்ற சீனி அம்மன் கதை சொன்ன விதமே தனிப் பாணி.

நெஞ்சத்தை சிலிர்க்க வைத்தது..

பத்து வயதில் அவர் கப்பலில் பொடியனாகப் போனார். ஐம்பது வயது வரை அவர் கப்பலிலே காலத்தைக் கழித்தார்.

நேரு, காந்தி, ராஜாஜி, ஜயப்பிராஸ் நாராயண், காமராஜர், அறிஞர் அண்ணாத்துரை போன்ற பெரியார்களை நேரில் சந்தித்த சீனி அம்மான்!

அந்தக் காலத்தில் பர்மா, பினாங்கு, இந்தியா என்றெல்லாம் பாய்மரக் கப்பலில் பயணம் செய்தவன். கடலுக்குள் வாழ்ந்தவன் என்று கம்பீரமாக நெஞ்சை நிமிர்த்தி நெஞ்சை நிமிர்த்தி சொன்னார்.

தொடர்ந்து தனது பயங்கர அனுபவத்தை சொல்கிறார்;

சாவு நம்மை அண்மித்துக் கொண்டிருக்கிறதைத் தவிர வேறு ஒன்றுமே நமக்குத் தெரியாது!

ஏதாவது ஒரு பெரிய கப்பல் அந்த நேரம் வர மாட்டாதா என்ற கடைசி நேர ஏக்கம்.

(பயணம் தொடரும்...)

## படிப்பது எப்படி? 8

S.சுரேஸ்குமார் B.Sc. (Hons), M.BA (Lon.)

**படிக்கும் போது பாட்டுக் கேட்டுக் கொண்டு அல்லது FM கேட்டுக் கொண்டு படிக்கலாமா?**

இல்லை, எங்களுடைய மூளை ஒரு நேரத்தில் ஒரு விடயத்தையே சிறந்த முறையில் கிரகிக்கும் எனவே பாட்டுக் கேட்டுக் கொண்டு படிப்பது உங்கள் கிரகித்தல் திறனைக் குறைக்கும். எனவே அதனைத் தவித்தல் சிறந்தது. நீங்கள் விரும்பினால் ஒரு மணி நேரம் படித்த பின் ஒன்று அல்லது இரண்டு நல்ல பாடல்களை தெரிவு செய்து கேட்கலாம்.

**மாணவர்கள் கையடக்கத் தொலை பேசி பாவிக்கலாமா?**

இல்லை, கையடக்கத் தொலைபேசியை நீங்கள் பாவித்தால் அதிக நேரம் வீண் விரயமாகி விடுவதுடன் சிந்தனை சிதறவும் சில பிழையான நண்பர்களால் தவறாக வழி நடத்தவும் காரணமாகி விடும். அத்துட்ன தேவையற்ற தொடர்புகள் ஏற்பட வாய்ப்பாகி ஏற்ற காலத்தில் கற்க்க வேண்டிய விடயங்கள் எல்லாம் கற்க்க முடியாமல் போய் தடம் புரண்ட புகையிரதத்தின் கதையாகி விடும். எனவே நீங்கள் ஒரு நிலையை அடையும் வரை கெயடக்கத் தொலைபேசியைப் பாவிப்பது தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**பாடங்களை இரவு படித்த பின் படுக்கைக்குச் செல்லும் போது என்ன செய்ய வேண்டும்?**

பாடசாலையின் நேர சூசியினைப் பார்த்து பாடம் நடைபெறாத வேளைகளில் கடந்த கால வினாக்களைச் செய்வதற்கு ஏற்ற வகையில் திட்டமிடுங்கள். விளங்காத பகுதிகளை அடையாளப் படுத்திச் சிறு பேப்பரில் எழுதி எடுத்துக் கொள்ளுங்கள். அடுத்த நாள் ஆசிரியரிடம் அதனைக் கேட்டு தெளிவு படுத்திக்கொள்ளுங்கள்.

(தொடரும்...)



– கலைஞர் மு.கருணாநிதி –

# பாயும் புலி பண்டாரவன்னியன்

சாவின் நுழைவு வாயிலுக்குள் போய்க் கொண்டிருக்கும் போது கூட, தனக்குத் தரப்பட்ட பணியை முடிக்கவில்லையே என்ற ஆதங்கம் தான் அந்த நன்றியுள்ள வீரனை ஆட்டிப் படைத்தது. துதிக்கையில் மாட்டிக் கொண்ட சுந்தரலிங்கம், சிலந்தியின் காலில் அகப்பட்டுக் கொண்ட சிறு பூச்சி போல ஆனான்! இன்னும் ஒரு முறை அந்த யானை, தனது துதிக்கையைத் சுழற்றி மேலே தூக்கித் தரையில் அடித்து, தனது கால்களால் அவனை மிதித்தால் அவன் ஒரு வாழை மட்டை போல மண்ணோடு மண்ணாகப் போய்விடுவான்!

பாஞ்சாலங்குறிஞ்சிப் படைத் தளபதிகளில் ஒருவனாகச் சிங்கம் போல் தரை தாளாமல் நிமிர்ந்து நிற்கும் அந்த தீராதி தீரன் சுந்தரலிங்கம் - ஒரு வெறி கொண்ட யானையினால் வீழ்த்தப்பட்டு உயிர் விடப் போகிறான் - அவனோ சாவதற்கு வருந்தவில்லை அவன் வசமிருக்கும் அந்த மடலை உரியவரிடம் சேர்க்க முடியவில்லையே என்று தான் வருந்தினான்!

ஒரு பெரும் பிளிறல் சப்தம்! யானை சுந்தரலிங்கத்தை மிக உயரத்தில் தூக்கி விட்டது. அவ்வளவு உயரத்திலிருந்து அவனைக் கீழே அடித்தால் சிதறுண்டு போவான்!

திடீரென்று யானையின் துதிக்கை மீது குருவிச்சி நாச்சியார் எறிந்த ஈட்டி தாக்கியது!

ஓங்கிய துதிக்கை, செயலற்றுக் கீழே சாய்ந்தது. அதற்குள் சுந்தரலிங்கம் அந்தத் துதிக்கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்து நின்றான்.

துதிக்கையிலிருந்து ரத்தம் குபு குபு என வழிய, அதிக சினங் கொண்டு பொங்கிய யானை - குதிரையிலிருந்த குருவிச்சி நாச்சி மீது பாய திரும்பி ஓடியது. ஆவேசங் கொண்ட யானை, அவளை மோதிச் சாய்த்து விடும் என்று கருதிய சுந்தரலிங்கம், கீழே வீழ்ந்து கிடந்த தனது வாளை எடுத்து அந்த யானையின் பிடரிப் பகுதியிலும், வயிற்றுப் பகுதியிலும் மாற்றி மாற்றிக் குத்தினான். ஏற்கனவே துதிக்கை அறுபட்டுத் துடித்த யஸனையினால் அதற்கு மேல் சமாளிக்க முடியவில்லை.

அந்த நேரம் கண்ணகி கோவிலின் பெரிய மணி அடிக்கும் ஓசை, குருவிச்சி நாச்சியின் காதில் விழுந்தது. விசாகத்திருவிழாவின் இறுதி நாளில் தான் அந்தப் பெரிய மணி அடிக்கப்படும் அப்படி அடித்தால் மன்னர் ஆலயத்திற்கு வந்து விட்டார் என்று அர்த்தம். எனவே அந்தப் பெரிய மணி ஓசை கேட்டதும் குருவிச்சி நாச்சி, குதிரையிலிருந்தவாறே திடுக்கிட்டாள். அட அட! அவர் வந்து விட்டார்! அவளது வாய் முணுமுணுத்தது! ஒரு கணம் கூட அங்கு தாமதிக்க விரும்பாமல் குதிரையை கண்ணகி கோவிலுக்குச் செல்லும் வழியில் திருப்பினாள். குதிரை அவளைத் தூக்கிக் கொண்டு பறந்தது.

யார் அந்தப் பெண்மணி? நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றினாள் - நாம் அவளை ஆபத்திலிருந்து காப்பாற்றினோம்! ஆனால் ஒரு வார்த்தை கூட விசாரிக்காமல் போய் விட்டாளே!

என்று சுந்தரலிங்கம் தனக்குத் தானே பேசிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். அப்போது அவனை நோக்கி வேலும், வாளும், ஈட்டியும் தாங்கிய வீரர்கள் பத்துப் பேர் வந்தார்கள். இவர்கள் யார் திடீரென்று? சுந்தரலிங்கம் சிந்திப்பதற்குள்ளாகவே அந்த வீரர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு விட்டனர் அவர்களில் தலைமைவீரன் மற்றவர்களைப் பார்த்து அவனைக் கைது செய்யுங்கள்! என்று கட்டளையிட்டான்.

என்னை ஏன் கைது செய்ய வேண்டும்? என்று சுந்தரலிங்கம், எரிச்சலுடன் கேட்டான்.

அரசுக்குச் சொந்தமான காட்டு யானையைக் கொண்டிருக்கிறாய்! இது மிகப் பெரிய குற்றம்! அதனால் தான் உன்னைக் கைது செய்கிறோம்!

நான் சொல்வதைக் கேளுங்கள்!

பேச்சுத் தேவையில்லை! பேசாமல் எங்களுடன் வா!

நாலு கால் மண்டபத்தில்!

அவசர அவசரமாகக் குதிரையிலிருந்து இறங்கிய குருவிச்சி நாச்சியார், கண்ணகி அம்மன் கோவில் மண்டபத்திற்குள் விரைந்தோடினாள். அங்கே கண் இமைகளை மெல்ல மூடிய படி மன்னன் பண்டாரக வன்னியன் எனும் குலசேகரம் வைரமுத்து கரங்கூப்பிக் கண்ணகி தெய்வத்தைத் தொழுது நிற்கும் காட்சியைக் கண்டு - சற்று ஒதுங்கி நின்று அவனையே கவனித்துக் கொண்டிருந்தாள் இமை கொட்டாமல்!

கோயில் மண்டபத்திற்குள் வந்து கண்ணகி அம்மனை வணங்குவோர் மன்னர்களாகவே இருந்தாலும் மேலங்கி எதுவும் அணியாமல், உத்தரியத்தைக் கூட இடுப்பில் கட்டிக் கொண்டு மரியாதையாக நடந்து கொள்ள வேண்டுமென்ற மரபின் படி அவன் தோற்றமளித்தான். இந்த நிலையில் அவனது விரிந்த பரந்த மார்பையும் - வைரம் பாய்ந்த புஜங்களையும் தனது விழிகளால் விழுங்கிக் கொண்டிருந்த குருவிச்சி நாச்சி, இந்த வீரத் திருமகன், தனக்குக் காதலனாகக் கிடைத்திட வரம் அருளியவள் கண்ணகி தேவி தான் என்ற நன்றியுணர்வு அருவியெனப் பெருக்கெடுத்திட அம்மன் சிலையை நோக்கி ஆனந்தக் கண்ணீர் பொங்கிடத் தாழ்த்தி வணங்கினாள்.

இளமையின் இன்பக் கூத்து - எழிலின் பூரிப்பு - அங்கமெல்லாம் ஆரவாரம் செய்திடும் அந்தக் காதலர் இருவரும், கோயில் மண்டபத்திற்குள் எவ்வளவு பவ்யத்திற்கும் பக்தி பூர்வமாகவும் பத்தினித் தெய்வத்தை வழிபடுகின்றனர் என்பதை விசாகத் திருவிழாவிற்குத் திரண்டிருந்த வன்னி முல்லைப் பகுதி மக்கள் அனைவருமே வியப்புடன் கண்டு களித்து வாழ்த்தினர்.

சென்ற ஆண்டே இருவரின் திருமணமும் அந்தக் கோயில் மண்டபத்தில் கண்ணகியின் திருமுன் எளிய முறையில் நடை பெறப் போகிறது என எதிர்பார்த்து ஏமாற்றமடைந்திருந்த மக்கள், இந்த ஆண்டு ஒரு வேளை அந்த இனிய நிகழ்ச்சி நடைபெறக் கூடுமென எண்ணிக் காத்திருந்தனர்.

அம்மனை வணங்கிய குருவிச்சி நாச்சி அடுத்து, குலசேகரம் வைரமுத்துவின் கால்களில் விழுந்து வணங்கினாள். மன்னன், அவளின் இரு தோள்களையும் மெல்லப் பற்றி எழுந்திடச் செய்து தனது கையிலிருந்த மலர்க் கொத்தை அவளது கூந்தலில் சூடினான். தனக்கு முன்னே நீட்டப்பட்ட தட்டிலிருந்த குங்குமத்தை எடுத்து - குருவிச்சி நாச்சியார் அவன் நெற்றியில் திலகமிட்டாள். பின் இருவரும் அம்மனைத் தொண்டனிட்டுத் தொழுது எழுந்தனர்.

மண்டபத்தை விட்டு வெளியே வரும் வரையில் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. அவர்களை மீறி அவர்களின் நெஞ்சங்கள் தான் இணையாக இசை பாடிக் கொண்டிருந்தன. கம்பீரமாகச் சிங்கம் போல் நடந்து வரும் இளம் மன்னனையும், கவர்ச்சி முழுவதும் கொட்டி செதுக்கப்பட்ட சிலை போல அனைவருருகே நடந்து வரும் அந்த மயிலனையாளையும் - வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த ஒரு வயோதிபத் தாய்.

(வன்னியின் வரலாறு தொடரும்...)

# நிகழ்வுகளின் நிழல்கள்

தொகுப்பு: பார்த்தீபன்



நுணாவில் பொது நூலக தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நுணாவில் பொது நூலக மண்டபத்தில் சாவகச்சேரி நகராட்சிமன்ற தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே. சயந்தன், யாழ். டிறிபேர்க் கல்லூரி அதிபர் திரு க.அருந்தவபாலன், சாவகச்சேரி நகராட்சிமன்ற உறுப்பினர்கள் திரு.க.மயில்வாகனம், திரு த.சுதர்சன், சாவகச்சேரி திரு ந.திருக்குமரன், உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.த.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களின் ஆக்கத்தில் உருவான "பேரிகை" செய்திமடல் வெளியீட்டு நிகழவு கடந்த வாரம் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் ஆசிரியர் அருணாசலம் சத்தியானந்தம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.விந்தன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் அ.பங்கயற்செல்வன், கனகபுரம் மகாவித்தியாலத்தின் பிரதி அதிபர் த.சேதுபதி, பாரதி வித்தியாலய அதிபர் திரு.பெ.கணேசன், ஆகியோரும் மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதழாசிரியர் திரு.க.குகபரன் ஆசிரியர் ஒருவருக்கு நூலை வழங்குவதையும், பாடசாலை அதிபர் மு.ரவீந்திரன் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க பாரதி விழா பதிவுகள். நிகழ்வின் அனுசரணையாளர்களான கிருபா லேணேர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் தம்பதியரும் திருநெல்வேலி தேனு களஞ்சிய உரிமையாளர் தி.ஸ்ரீமோகனராஸ் தம்பதியரும் மங்கல விளக்கேற்றுவதையும், தமிழச் சங்கத்திற்கான உத்தியோகபூர்வ இணையத்தளத்தை துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தொடக்கி வைப்பதையும் இணையத்தளத்தை வடிவமைத்த தங்கராஜா தவரூபனுக்கான மதிப்பளிப்பையும் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக நடனத்துறையினர் வழங்கிய புதுமைப் பெண் நாட்டிய நாடக நிகழ்வு மற்றும் நல்லதோர் வீணை இசை நிகழ்வின் பதிவுகளையும் படங்களில் காணலாம்.



யாழ் எய்ட் அமைப்பால் சமூக சேவையாளர்களும் கனடா வாழ் புலம்பெயர் ஈழத்தமிழர்களுமான திரு தி.சத்தியமூர்த்தி, செல்வி ச.அஞ்சனா, திரு.ம.பிறேம்குமார் ஆகியோரின் அனுசரனையில் அதிக பின்தங்கிய பிரதேசமான கிழக்கு மாகாண தி/ மூதூர் கிறவல்குழி சிவசக்தி வித்தியாலயத்தில் (சந்தோசபுரம்) கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்குக் கற்றல் மேம்பாட்டிற்கான பல்வேறான உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதனைப் பாடசாலை முதல்வர் உட்பட பலர் வழங்கி வைத்தனர்.




முதலாம் குறுக்குத்தெரு, மணிப்புரியைச் சேர்ந்த யூட் பிறைனர் அன்ரன் றஞ்சித்குமார் அவர்களால் 13.12.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.